www.tamilarangam.net


# களத்தில்

(04.11. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (173) அன்பளிப்பு: 60 p


மிகவும் சோதனையான இக்கால கட்டத்தில் நெஞ்சத்தை உலுப்பும் வேதனைகளையும் நாம் சுமந்து நின்று மிகவும் நிதானமாக, மிகவும் விழிப்பாக, உறுதி தளராது எமது இலட்சியப்பணியைத் தொடர வேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

# தாய்மண் விடிவுக்கு தம்மைக் கொடுத்தோர்க்கு தமிழீழத்தில் நினைவுக்கல்

## விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ மரியாதையுடன் திரைநீக்கம்

கடந்த 18.10.91 இல் ஜேர்மனியில் வாகன விபத்தொன்றில் சாவடைந்த மேஜர் சுரேந்தி அல்லது நித்தலா நமச்சிவாயம் சுரேந்திரகுமார்— யாழ். மாவட்டம் கடந்த 26.10.96 இல் பிரான்சில் சிறிலங்கா அரசின் கைக்கூலிகளால் சுடப்பட்டு வீரச்சாவடைந்த லெப். கேணல்.நாதன், கந்தையா பேரின்பநாதன்—யாழ் மாவட்டம், கப்டன் கஜன், கந்தையா கஜேந்திரன் —யாழ்மாவட்டம் ஆகிய மாவீரர்களின் திருவுருவப் படங்கள் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

முன்னதாக பிற்பகல் 4.00 மணியளவில் விசுவமடு மாவீரர் மண்டபத்தில் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. அன்பு தலைமையில் வீர வணக்க நிகழ்வு நடைபெற்றது. இதன் போது தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் பொது ஈகைச் சுடரினை ஏற்றி வைத்தார். பின்பு மாவீரர் கப்டன் கஜனது திருவுருவப் படத்திற்கு விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் சங்கர் அவர்களும், மாவீரர் லெப்.கேணல் நாதன் அவர்களது திருவுருவப் படத்திற்கு புலிகளின் குரல் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் அவர்களும் மாவீரர் மேஜர் சுரேந்தி அவர்களது படத்திற்கு அவரது சகோதரரும் மலர் மாலை அணிவித்து ஈகைச்சுடரினை ஏற்றினர்.

இதனையடுத்து நடந்த நினைவுரையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு திலகர் அவர்கள், மாவீரர் லெப். கேணல். நாதன்

தொடர்ச்சி 7 ம் பக்கம்....

# ஐ.நா.சபைக்கு வை.கோ

## தமிழர் பிரச்சனை குறித்து மகஜர் கையளிப்பு

கடந்த 19.10.98 அன்று மாலை 4.30 மணிக்கு ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் பணிமனையில், திரு. வை.கோ பாலசாமி அவர்கள், மனித உரிமைகளுக்கான பிரதி ஆணையாளர் திரு. என்றிக்யூ ரேர் கொஸ்ற் அவர்களுடனும், மனித உரிமைகளுக்கான சிறீலங்காப் பிரிவு அலுவலரான திரு. கரீம் கெஸ்ராலி அவர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். ஈழத் தமிழர்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இன அழிப்பு நடவடிக்கைகளையும், மனித உரிமை மீறல்களையும் விளக்கும் மனு ஒன்று திரு. வை. கோ அவர்களால் கையளிக்கப்பட்டது. ஒரு மணிநேரமாக நடைபெற்ற கலந்துரையாடலில், செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக ஐ.நா இன் மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி திரு. வை. கோ அவர்களால் வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பாக தாம் நடவடிக்கை எடுப்பதாக மனித உரிமைகளுக்கான பிரதி ஆணையாளரால் பதிலளிக்கப்பட்டது.

இதே வேளை காலை 10.00 மணிக்கும் திரு. வை.கோ அவர்கள், அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்திய பிரதிநிதிகள் குழுவின் பிரதிப் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் தென்கிழக்கு ஆசிய, கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டார். ஒரு



பசுபிக் பிராந்திய நடவடிக்கைப் பொறுப்பாளரான பிரான்சிஸ் மார்க்லே அவர்களுடனுமான மற்றுமொரு கலந்துரையாடலில் கலந்து கொண்டார். 75 நிமிடத்திற்கு நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஈழத் தமிழர்கள் படும் அவலங்கள் திரு.வை. கோ அவர்களால் எடுத்துரைக்கப்பட்டதோடு, அவர்களுக்கு மனிதநேய உதவிகள் சென்றடைய வேண்டியதன் அவசியமும் விளக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரகத்தின் தென் ஆசிய பிராந்திய பொறுப்பாளர் திரு. ரஜீவ் கப்பூர் அவர்களுடனும், ஆசிய பிராந்திய செயலக ... மணிநேரமாக நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தமிழீழத்தில் அகதிகளாக

தொடர்ச்சி 15 ம் பக்கம்....

# பள்ளி மாணவி மீதும் பாலூட்டும் தாய் மீதும் பாலியல் வன்முறை

❊ கைது செய்தவரையும் கையெழுத்திடச் சென்றவரையும் கொலை

❊ சந்திரிகாவின் சிங்கள ப்படைகளின் மனித வரலாறு காணாத கொடுமைகள்

நாளும் பொழுதும் தமிழினத்தின் இரத்தத்தில் அரசியல் நடாத்தும் சந்திரிகாவின் சிறிலங்காப் படைகள் மனிதவரலாறு காணாத கொடுமைகளை தமிழ் மக்களுக்கு தினம் தினம் இழைத்து வருகின்றனர்.

வட்டுக்கோட்டை அரசடி வீதியைச் சேர்ந்த திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 16 வயதுப் பள்ளி மாணவி ஒருவர் மீது சிங்களக் கடற்படையினர் மூவர் கூட்டாக பாலியல் வன்முறையில் ஈடுபட்ட கொடுஞ்செயல் அக்டோபர் 15ம் நாள் நடைபெற்றுள்ளது.

இதற்கு இருதினங்களுக்கு முன்னர் வட்டுக் கோட்டை தெற்கு முதலிக் கேணி பகுதியில் கைக்குழந்தைக்கு பாலூட்டும் இளம் தமிழ் தாய் ஒருவர் சிங்களக் கட... படையினர் இருவரால் மிருகத்தனமான முறையில் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.யாழ்ப்பாண நாயன்மார்கட்டைச் சேர்ந்த 4...

தொடர்ச்சி 2 ம் பக்கம்....

# செம்மணி புதைகுழிகள் குறித்த சர்வதேச மன்னிப்புச்சபையின் விசாரணை காலந்தாழ்ந்தமைக்கு சிறிலங்காவே பொறுப்...

❊ *சர்வதேச மன்னிப்புச்சபையின் குற்றச்சாட்டை சமாளிக்க சிறிலங்கா தீவிர முயற்சி*

❊ *தடயங்களை அழித்துவிட்டு ஒத்துழைப்பு முயற்சியா என சிறிலங்கா மேல் பலத்த சந்தேகம்*

சர்வதேச மன்னிப்புச் சபையின் செம்மணி மரணப் புதைகுழிகள் குறித்த விசாரணை காலந்தாழ்ந்தமைக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் ஒத்துழைப்பின்மையே சர்வதேச ... அரசாங்கத்தை பகிரங்கமாக குற்றம் சாட்டி வருகின்றது. இதனை சமாளிக்கும் வகையில் செம்மணிப் புதைகுழிகள் குறித்து தீவிர விசாரணை செய்யத் தாம் தயாராக இருப்பதாக சிறிலங்காவின் ... வித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை உறுப்பினர் ஒருவரை விசாரணை செய்வதற்கு தம்முடன் அனுமதிக்குமா... தாம் கேட்டுள்ளதாகவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மூன்று நீண்ட ஆண்டுகள்

எம் உயிரினும் இனிய தமிழீழ மக்கள்– எங்கள் கிட்டிய சொந்தங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், பள்ளித் தோழர்கள், நாம் போற்றி மதித்த பெரியவர்கள் – தங்கள் வீடு வாசல்களை விட்டு சிங்கள இராணுவப் பயங்கரவாதத்தில் இருந்து உயிர் தப்புவதற்கான பாரிய இடப்பெயர்வை மேற்கொண்டு மூன்று நீண்ட ஆண்டுகள் 30.10.98 உடன் பூர்த்தியாகின்றது.


இவர்கள் ஏன் தாங்கள் உயிரிலும் மேலாக பேணிப் பாதுகாத்த தமது வீடுவாசல்களை, சொந்த பந்தங்களை விட்டுப் புறப்பட்டார்கள். எறிகணைகளையும் நாசகார குண்டுகளையும் தங்கள் தலைகள் மேல் சிறிலங்கா கொட்டி தங்களை இனஅழிப்பு செய்வதில் இருந்து தப்பிப் பிழைப்பதற்காகவே இவர்கள் புறப்பட்டனர்.

இவர்களின் அச்சம் மிகையானது அல்ல என்பதை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் 87,000 எறிகணைகளுக்கும் மேலான எறிகணைகள் சிங்களப் படைகளால் யாழ்ப்பாணம் நோக்கிய நகர்வில் பயன்படுத்தப்பட்டதாக அக்காலத்தில் யாழப்பாண நகரில் தங்கியிருந்து – முதியவர்களுக்குப் பணிபுரிந்த – கிறிஸ்தவத் துறவி ஒருவர் பின்னர் குறிப்பிட்டுள்ளார். துணிவுடன் தீர்மானித்தோம் – செய்து முடித்து விட்டோம? இது எப்பொழுதுமே சிங்கள நாடு என்ற வாசகங்களை சிங்களச் சிப்பாய்கள் யாழ் நகரில் பொறித்தனர் எனவும் அந்த கிறிஸ்தவத் துறவி சாட்சியம் பகன்றுள்ளார். சந்திரிகா சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் நடாத்தும் தமிழ் மக்கள் மீதான யுத்தத்தின் நோக்கு என்ன என்பதை இந்த வாசகங்கள் உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டின.

சனநெருக்கம் மிகுந்த யாழ்ப்பாண நகரில் 450 பேர் மட்டுமே இடம்பெயராது தங்கியிருந்தனர் என்பதையும் அத்துறவி வெளிப்படுத்தினார். ஒரு அந்நிய அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக்கான இனஅழிப்பு நோக்குடைய இராணுவப் பயங்கரவாதத்திலிருந்து விடுபடுவதற்கு தமிழீழ மக்கள் பாரிய இடப்பெயர்வடைந்தனர். தமிழீழ மக்களைக் குடிகளாக கருதாத சிறிலங்கா அரசாங்கத்தை தமது அரசாகத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்ற பொது விருப்பினை இப்பாரிய இடப்பெயர்வு உலகிற்கு வெளிப்படுத்தியது.

சிறிலங்கா அரசாங்கமும் அந்நிய நாடொன்றைக் கைப்பற்றியது போல் மக்கள் இல்லாத யாழ்ப்பாண வெளியில் வெற்றிக் கொடியேற்றி மக்கள் நிறைந்த கொழும்பு மாநகரில் வெற்றிவிழாக் கொண்டாடியது.

அவ்வேளையில், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் – எதிரி எம்மண்ணை படைபலம் கொண்டு ஆக்கிரமிக்கலாம். ஆனால், எங்கள் மண்ணில் நிலைத்து நிற்க முடியாது. எங்கள் மண்ணே எதிரியின் கல்லறையாகும் – உறுதியாக கூறினார். இந்த நீண்ட மூன்று ஆண்டுகள் தலைவர் பிரபாகரனின் வார்த்தைகளின் உண்மைத் தன்மையை முல்லைத்தீவு முதல் கிளிநொச்சி வரை நிரூபித்து நிற்கின்றது. தமிழீழக் கடலிலும் தரையிலும் வானிலும் சிங்களப் படைகளினால் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை மேலும் மேலும் உறுதியடைந்து வருகின்றது. ஜயசிக்குறுய் தொடங்கிய இடத்தையே சுற்றிச் சுற்றி வந்து சிங்களப் படைகளின் பேரழிவுக்குப் பாதை திறந்து விட்டுள்ளது. புலிகளைக் காட்டுக்கு அனுப்பி விட்டதாக கூறியவர்கள் தமது படையினரைக் காட்டுக்குள் தேடும் பரிதாப நிலையில் உள்ளனர். நானே எனக்குப் பகையானேன் என் நாடகத்தில் நானே முடிவானேன் என சிங்களப்படைகளின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை பாட்டிசைக்க வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், பிரதிப் பாதுகாப்பமைச்சரும் பாதுகாப்புப் படைகளின் தலைவரும் ஜனாதிபதி சந்திரிகாவும் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டுவதே தம்



தலையாய கடமை எனவும் அதனை நெருங்கி விட்டதாகவும் ஏமாற்றுக் கதைகள் கூறி மேலும் மேலும் சிங்களவர்களைப் பிடித்திழுத்துச் சிப்பாய்களாக்கி களமுனைக்கு கழுவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்விதம் அழிவுகளைச் சந்தித்தும் தொடர்ந்தும் சண்டையை சிங்கள அரசாங்கங்கள் தொடர்வதற்கு முக்கிய நோக்கு ஒன்று உண்டு. யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளையல்ல அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றழித்து இனஅழிப்பு ஒன்றை நியாயப்படுத்திக் கொள்ளலாம் என்பதே அந்நோக்கு. தீவளாவிய நிலையில் நோக்குமிடத்து சனத்தொகை ரீதியாக தமிழ் மக்களை மேலும் மேலும் சிறுபான்மையினராக்கி அவர்களது ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை முற்றிலும் வலுவற்றதாக்கலாம். தமிழர்களின் அரசியல் பணிவை ஆயுதமுனையில் பெறுவதை தடுக்கும் சக்தியினை தமிழர்களை இழக்கச் செய்யலாம். தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து இலங்கைத்தீவு சிங்களவர்களுக்கு மட்டுமே உரிய நாடு என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்த தமிழர்களின் உயிரும் உடலும் உட்கட்டுமானங்களும் அழிவுறுவது பேருதவியாக மாறும்.

அதனால், சிங்களப் பேரினவாதத்தால் நெறிப்படுத்தப்படும் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் எப்பொழுதுமே யுத்தத்தை தொடர்வதை – வேறு மொழியில் கூறுவதானால் தமிழின அழிப்பை தமது அரசியல் செயற்திட்டமாகவே எப்பொழுதும் கொண்டிருக்கும்.

இதன் மறுவடிவமே வன்னிப்பகுதிக்கான உணவுத் தடை மருந்துத் தடை. உணவு, போரில் ஆயுதமாக்கப்படுவது மட்டுமல்லாமல் இனஅழிப்புக்கான அரசியல் திட்டமொன்றின் அங்கமாகவும் உள்ளது. ஆகவேதான், உணவுத் தடையை ஒரு அரசியல் திட்டமாக இனங்காணும் வன்னி மக்கள் தமக்கு உணவு வேண்டி தொடர்ந்தும் உறுதியுடன் சாத்வீகப் போராட்டங்களை நடாத்துவதும் இல்லாமல் சர்வதேச நிறுவனங்களையும் தமது பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாக பார்க்கப்படாது இனஅழிப்பு பிரச்சினையாக சர்வதேசப் பிரச்சினையாக– அனைத்துலக மனித உரிமைப் பிரச்சினையாகக் கருதப்பட்டு தமக்கு உடன் உணவு வழங்கப்படல் வேண்டும் எனக் கோரி தம் பிராந்திய சர்வதேச நிறுவனங்கள் முன்பாகவும் சாத்வீகப் போராட்டம் நடாத்துகின்றனர்.

போரின் விளைவாக ஏற்படும் சில பிரச்சினைகளில் சர்வதேச அமைப்புக்கள் விடுதலைப் புலிகளை அணுகி தமது கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். விடுதலைப்புலிகளும் சர்வதேசத் தன்மையை மதித்துப் பேணி விடுவிப்புக்களையும் சர்வதேச முறைமைகளையும் செயற்படுத்துகின்றனர். ஆனால், இந்த சர்வதேச அமைப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சார்பாக குரல் எழுப்புவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உரிய இடத்தினை சர்வதேச அமைப்புக்களில் தோற்றுவிப்பதில் காட்டும் காலதாமதமே மூன்றாண்டுகளாகியும் தமிழ் மக்கள் வன்னியில் உணவின்றி வாடிவதங்க காரணமாகின்றது. யாழ்குடா நாட்டில் காணாமல் போதல்களும் பாலியல் வன்முறைகளும் இனக்கொலைகளும் அதிகரிக்க காரணமாகின்றது. எனவே பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சார்பாக சர்வதேச மட்டத்தில் பிரச்சினைகளை எடுத்து இயம்பும் உரிமையை தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உடன் ஏற்படுத்திக் கொடுக்கும்படி சர்வதேச அமைப்புக்களை வற்புறுத்த வேண்டியவர்களாக புலம்பெயர் தமிழர்களாகிய நாம் உள்ளோம்.

மேலும் வன்னி மக்களின் முக்கிய பிரச்சினை உணவு மட்டுமல்ல தங்களது நிலையை உலகுக்கு வெளிப்படுத்துவதில் ஏற்படும் மூடுமந்திர நிலையுமாகும். இதனை உடைத்தெறிந்து வன்னியில் மட்டுமல்ல யாழ்குடா நாட்டில் மட்டுமல்ல தமிழீழம் முழுவதும் உள்ள மக்களின் யதார்த்த நிலையினை வெளிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு புலம் பெயர் தமிழர்களாகிய எம்முடையதாகின்றது. இதனை விரைவாகச் செய்வதினாலும் எமது மக்களின் பாதுகாப்புக்கும் புனர்வாழ்வுக்கும் உடன் உதவிகளை வாரி வழங்குவதினாலுமே நம் ஊரை விட்டு விரட்டப்பட்ட மக்கள் மீண்டும் தம் ஊர்களில் வாழ்வுபெறவும், இனியும் நம் மக்கள் தம் ஊர்களை விட்டு விரட்டப்படாது இருக்கவும் நம்மால் உதவ முடியும். மூன்று நீண்ட ஆண்டுகள் எம்மக்கள் துன்பப்பட்டது போதும். விரைவாக ஒன்றாக புலம்பெயர் தமிழர்களாகிய நாம் செயற்பட இந்த மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் உறுதி பூணுவோம். ❆

## பள்ளி மாணவி மீதும்.....

*வயதான இராசநாயகம் உதயக்குமார் என்பவரைக் கைது செய்து கொண்டு சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் அவரை 28.10.98ல் விடுதலை செய்வதாக அவரின் மனைவிக்குச் சொல்லி விட்டு அவரைச் சித்திர வதைப்படுத்திக் கொலை செய்து விட்டு அதே 28ம் திகதி அவரின் சடலத்தை யாழ் வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். கணவனை கூட்டிச் செல்ல வந்த மனைவி அவரின் உயிரற்ற உடலின் மேல் விழுந்து நெஞ்சம் வெடித்தழுததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.*

*சிறிலங்கா இராணுவத்தினரின் மனித வதைகள் தமிழீழமெங்கும் ஒரே மாதிரியாகவே உள்ளன என்ற உண்மையை வெளிப்படுத்தக் கூடிய வகையில் மடட்க்களப்பு கல்மடு இராணுவ முகாமுக்கு தீபாவளித் தினத்தன்று கையொப்பமிடச் சென்ற 18 வயது மாணவனான ஐயாத்துரை இன்பராசாவை அருகிலிருந்த தென்னந் தோப்புக்குள் இழுத்துச் சென்று சுட்டுக் படைகள் மாணவர்களின் வகுப்பறைகளுள் புகுந்து அவர்களை இம்சித்து சோதனை செய்துள்ளமை சிறிலங்காப்படைகளின் கொடுமை மேலும் மோசமடைவதற்கான அறிகுறியாக உள்ளது.*

*மாங்குளத்தில் பாலைப்பாணி என்ற இடத்தில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற 49 வயது சுப்பிரமணியம் பாலராஜா 56 வயது தர்மராஜா ஆகியவர்களை சிறிலங்கா இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது.*

*பண்ணைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் மேல் சிறிலங்கா படையினர் சுட்டதில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கதிரவேலு நாகேந்திரம் கொலை செய்யப்பட்டுள்ளார்.*

*களுவாஞ்சிக்குடியில் முப்பது வயதான கலாவதி சுப்பிரமணியம் என்ற இளம் தமிழ்ப் பெண் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகி இனக் கொலையடைந்துள்ளார்.*

*சிங்களப் படைகளின் அட்டூழியங்களுக்கு கோயில் குருக்களும் தப்புவதில்லை. செல்வத் தேசிக... குடும்பத்தினர் கொண்டு வந்து கடும் முயற்சிகளை மேற்கொண்டதையடுத்து அவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது.*

*சிங்களப் படையினர் தகவல்கள் வெளிவராது தடுப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். யாழ்குடா நாட்டில் வெளிவரும் உதயன் மற்றும் சஞ்சீவி பத்திரிகையின் ஆசிரியர்கள் பலாலி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ் பல்கலைக் கழக மாணவர்களுக்கு விடுத்த வேண்டுகோளை பிரசுரித்தமைக்காக கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனின் பேட்டி கொழும்புப் பத்திரிகைகளில் வரமுடியுமென்றால் தமது பத்திரிகையில் மாவட்ட அரசியல் பொறுப்பாளரின் பேட்டி ஏன் வரக் கூடாது என அவர்கள் கேட்டதற்கு அங்கு சிவில் நிர்வாகம் நடக்கிறது ஆனால் இங்கு அப்படியல்ல என*

## செம்மணி புதைகுழிகள்.....

*அதற்கு அவர்கள் சம்மதித்துள்ளதாகவும் தெரிவித்த சிறிலங்காவின் சட்டமா அதிபர் விசாரணை செய்ய யாழ் செல்லும் குழுவினரின் பாதுகாப்புக்கு தம்மால் உத்தரவாதம் வழங்க முடியாது என அச்சுறுத்தலும் விடுத்துள்ளார்.*

*இதற்கிடை புதைகுழிகள் தொடர்பான தடயங்களை அழிப்பதற்கான போதிய கால அவகாசங்களை வழங்கி விட்டே தற்போது சிறிலங்காவின் சட்டமா அதிபர் விசாரணை குறித்து பேசத் தொடங்கியுள்ளார் என்ற பலத்த சந்தேகம் அனைத்து மட்டங்களிலும் எழுந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.*

*இதே நேரத்தில் செம்மணிப் புதைகுழிகள் குறித்து விசாரணை நடத்தாமல் காலம் கடத்தப்படுவதைக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 4000*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கொசோவாவும் தமிழீழமும்

## ஒன்றுக்கொன்று முரணான அனைத்துலகப் பார்வையும் உருவாக்கப்பட வேண்டிய சமபலநிலையும்

### வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக சமபலநிலை இருப்பது அவசியம்

*வி. உருத்திரகுமாரன்.*

(சர்வதேச விவகாரங்களுக்கான றோயல் நிறுவனத்தின் கருத்தரங்கின் போது ஆற்றிய உரை )

உலகின் பல்வேறு பாகங்களில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளையும் அதனால் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் அனைத்துலக சமூகம் இன்று கண்டு வந்துள்ளது. எரித்திரியாவுக்கும், எதியோப்பியாவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், ஆபிரிக்க காங்கிரசுக்கும், ஆபிரிக்க அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், டேய்றன் சமாதான திட்டம், வட அயர்லாந்து சமாதான ஒப்பந்தம் போன்றவற்றுக்கு வழிவகுத்துள்ளன.

இன்று கொசோவாவிலுள்ள அல்பேனியர்கள் மீதான சேர்பிய அரசாங்கத்தின் இனப்படுகொலைகள், ஒடுக்குமுறைகளை அவதானித்த அனைத்துலக சமூகம், அல்பேனியர்களை பாதுகாப்பதிலும், கொசோவா பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கொண்டு வருவதிலும் தன்னை அர்ப்பணித்துள்ளது. கொசோவாவில் அல்பேனியர்களின் நிலையும், இலங்கையில் தமிழர்களின் நிலையும் சில ஒத்த அம்சங்களை கொண்டுள்ளன. அவையாவன:

**அனைத்துலக சமூகம் எவ்வாறு கொசோவாவை யுகோஸ்லாவியாவின் முக்கிய பாகமாக கருதுகின்றதோ அவ்வாறே இலங்கையின்**

---

*சட்ட வல்லுனர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டமை போன்று, அனைத்துலக சமூகத்தை ஏமாற்றும் நோக்கில் அரசியல் தீர்வுப் பொதியை சமாதானத்துக்கான போர் எனும் கொள்கையின் முக்கிய அங்கமாக 1995ம் ஆண்டிலிருந்து சிறீலங்காவின் அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது. யாப்பு ரீதியான மாற்றங்கள் மூலம் தமிழர்களுக்கு சில சுயாட்சியுரிமைகள் வழங்கப்போவதாக கூறிக்கொண்டு தமிழர்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் நியாயப்படுத்தியது. அதாவது தீர்வுத் திட்டமானது, இராணுவ நடவடிக்கையை* [illegible]

யுகோஸ்லாவியாவின் முழு சனத்தொகையுடன் ஒப்பிடும் போது எண்ணிக்கையில் சிறுபான்மையினரான அல்பேனியர்கள், கொசோவாவில் பெரும்பான்மையினராக திகழ்கின்றனர். அவ்வாறே முழு இலங்கையின் சனத் தொகையுடன் ஒப்பிடும் போது எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள், இலங்கையின் வட-கிழக்குப் பாகங்களில் பெரும்பான்மையினரே.

எவ்வாறு 1989 இல் கொசோவர்களின் சுயாட்சியுரிமை சேர்பிய அரசாங்கத்தால் நீதிநியாயமின்றி கழையப்பட்டதோ, அவ்வாறே பிரித்தானியாவால் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும்போது எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களின் பாதுகாப்புக்கு உருவாக்கப்பட்ட பாதுகாப்பு யாப்பு 1972 இல் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களால் கழையப்பட்டது. சோல்பரி பிரபுவால் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும்போது தயாரிக்கப்பட்ட யாப்பின் 29 வது சாரமான இந்த பாதுகாப்பு யாப்பு, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமுடையிலான புனித யாப்பு என பிரித்தானிய பிரைவி கவுன்சிலால் வர்ணிக்கப்பட்டது.

எவ்வாறு கொசோவா பிரச்சனை அமைதி வழியில் தீர்க்கப்படாத நிலையில் கொசோவா விடுதலை இராணுவம் உருப்பெற்றதோ அவ்வாறே அமைதி வழியில் தமிழர் பிரச்சனை தீர்க்கப்படாத நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெற்றது. இது அனைத்துலக சட்ட திட்டங்களில் விளங்கிக் கொள்ளப்படுகின்றது.

எவ்வாறு கொசோவ மக்களின் அரசியல் அபிலாசைகளை 40,000 படைகளின் பாரிய படைக்கல சக்தியை பயன்படுத்தி ஒடுக்க சேர்பிய அதிபர் மில்செவிக் முயல்கிறாரோ, அவ்வாறே 100,000 படையினரின் பாரிய படைக்கல சக்த்தியை பயன்படுத்தி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒடுக்கிவிட சிறீலங்காவின் அதிபர் சந்திரிகா குமாரதுங்க முயல்கிறார்.

மேலும், உணவை ஆயுதமாக பயன்படுத்தி கொசோவர்களை பட்டினிச்சாவுக்குட்படுத்த சேர்பிய அதிபர் முற்பட்டார். அவ்வாறே சிறீலங்காவின் அதிபர் சந்திரிகாவும் உணவை ஆயுதமாக பயன்படுத்தி தமிழர்களை பட்டினிச் சாவுக்குட்படுத்த முயல்கிறார்.

கொசோவாவுக்கு தொண்டர் நிறுவனங்கள் சுயமாக செல்வதற்கு சேர்பிய அதிபர் தடைவிதித்துள்ளது போன்று இலங்கையின் வட-கிழக்குப் பாகங்களில் பெரும்பாலான தொண் [illegible]

பாகங்களை சிறீலங்காப் படைகள் ஆக்கிரமித்த பின் 600 பொதுமக்கள் காணாமல் போயுள்ளனர். திட்டமிட்ட காணாமல் போதல்களுக்கெதிரான ஐக்கிய நாடுகளின் இயங்கு குழுவின் அறிக்கையின் படி ஈராக்கை அடுத்து காணாமல்பேனோர் தொகையில் சிறீலங்கா இரண்டாவது இடத்தை வகிப்பதோடு, காணாமல் போனோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாத நாடு எனும் வகையிலும் தொடர்ந்து சுடானுக்கு அடுத்த நிலையை சிறீலங்கா வகிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் அறிக்கையின்படி கொசோவாவில் மக்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஆனால் சிறீலங்காவைப் பொறுத்த வரையில் அரச படைகள் தமிழ் மக்களை சித்திரவதை செய்வது ஒடுக்குமுறை கொள்கையின் ஓர் அங்கமாகவே உள்ளது.

கொசோவாவில் 260,000 மக்கள் அகதிகளாகவும், உள்ளக இடப்பெயர்வையும் அனுபவித்தவர்களாக

---

*திட்டமிட்ட காணாமல் போதல்களுக்கெதிரான ஐக்கிய நாடுகளின் இயங்கு குழுவின் அறிக்கையின் படி ஈராக்கை அடுத்து காணாமல்பேனோர் தொகையில் சிறீலங்கா இரண்டாவது இடத்தை வகிப்பதோடு, காணாமல்போனோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாத நாடு எனும் வகையிலும் தொடர்ந்து சுடானுக்கு அடுத்த நிலையை சிறீலங்கா வகிக்கின்றது.*

---

உள்ளனர். ஆனால் இலங்கையிலோ சிறீலங்கா அரச ஒடுக்குமுறை காரணமாகவும், தமிழ்ப் பிரதேசங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டதன் காரணமாகவும் உள்ளக இடப்பெயர்வை சந்தித்தவர்கள், அகதிகள் என 1 மில்லியன் மக்கள் உள்ளனர்.

இதுவரை கொசோவாவில் பாரிய புதைகுழிகள் எதுவும் உள்ளதாக தெரியவில்லை. ஆனால் சிறீலங்காவிலுள்ள நீதிமன்றத்தில் சாட்சியமளித்த இராணுவ வீரன் ஒருவனின் கூற்றின்படி செம்மணிப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 400 பொதுமக்களின் புதைகுழிகள் உள்ளன.

கொசோவாவில் சுயேட்சையாக செய்தியாளர்கள் இயங்குவதற்கு சேர்பிய அரசினால் இதுவரை தடைவிதிக்கப்படவில்லை. ஆனால், இலங்கையிலோ அதன் வட-கிழக்கு பாகங்களுக்கு செய்தியாளர்கள் செல்வதற்கு சிறீலங்கா அரசு தடைவிதித்துள்ளதோடு இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் செய்தித் தணிக்கை அமுலாக்கப்பட்டுள்ளது.

கொசோவ விடுதலை இராணுவம் [illegible]

**தமிழர் பிரச்சனையில் அனைத்துலக சமூகம் தனது பார்வையை மாற்ற வேண்டும்**

இரு பிரச்சனைகளுக்கும் இடையில் பல்வேறு ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன. ஆயினும் இரு பிரச்சனைகளையும் அனைத்துலக சமூகம் அணுகியுள்ள விதம் வேறுபட்டு காணப்படுகின்றது.

முதலாவதாக, பல மேற்குலக சக்திகளும், நேட்டோவும், கொசோவா பிரச்சனைக்கு சேர்பிய அரசு அரசியல் தீர்வு காணாத பட்சத்தில் ஆயுத பலத்தை பிரயோகிக்க முடிவு செய்துள்ளன. ஆனால் தமிழர் பிரச்சனையைப் பொறுத்த வரையில் சிறீலங்கா அரசுக்கு ஆயுத உதவிகள், இராணுவப் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் தமிழர் பிரச்சனையை இராணுவ ரீதியில் தீர்ப்பதிலேயே மேற்குலக நாடுகள் அக்கறை காட்டுவது புலப்படுகின்றது.

கொசோவாவிலிருந்து சேர்பியப் படைகள் விலகாத பட்சத்தில் ஆயுத பலத்தை பிரயோகிக்கப் போவதாக ஐக்கிய நாடுகளும், நேட்டோவும் எச்சரித்து வரும் அதே வேளை தமிழர் பிரதேசங்களிலிருந்து அரச படைகளை விலக்கிக் கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுப்பது செவிடன் காதில் ஊதிய சங்காகியுள்ளது.

கொசோவா மீதான உணவு மருந்துத் தடையை சேர்பிய அரசு நீக்காத பட்சத்தில் ஆயுத பலத்தை பிரயோகிக்கப் போவதாக ஐ.நா. வும் நேட்டோவும் எச்சரிக்கை விடுத்துள்ளன. ஆனால் விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்பட்டு வரும் பிரதேசங்கள் மீதான சிறீலங்கா அரசின் உணவு, மருந்து தடையை நீக்கும் எவ்வித நடவடிக்கையிலும் அனைத்துலக சமூகம் இதுவரை ஈடுபடவில்லை என்பது இங்கு கவனிக்க வேண்டியது.

கொசோவா மீதான சேர்பிய அரசின் நீதி நியாயமற்ற பாரிய படைக்கல சக்தி பிரயோகத்தை இரக்கமற்ற படுகொலைச் செயல் என மதிப்புக்குரிய பிரித்தானிய வெளி விவகார செயலாளர் திரு. ரொபின் குக் அவர்கள் வர்ணித்துள்ளார். ஆனால் ஆண்டாண்டு காலமாக தமிழ் மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் மனிதநேயமற்ற நடவடிக்கைகளை கண்டித்து அனைத்துலக சமூகத்தை சேர்ந்த எவரும் இதுவரை குரல் எழுப்பவில்லை.

கொசோவாவில் நடைபெறுவது ஓர் ஆயுதம் தரித்த போராட்டமாக சர்வதே குற்றச் செயல் விசாரணை மன்ற விசாரணையாளரால் வரையறை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே யுகோஸ்லாவியாவின் பிரச்சனையும் முன்னர் சர்வதே குற்றச் செயல் விசாரணை மன்றத்தால் வரையறை செய்யப்பட் பயங்கரவாதச் செயல்களிலிருந் பிரித்துக் காட்டப்பட்டது. ஆனா இலங்கையின் வட-கிழக்குப் பா ங்களில் நடைபெறும் போராட் ஓர் பயங்கரவாத நடவடிக்கையாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொசோவாவும் தமிழீழமும்......

காட்டிவரும் தீவிரம் காரணமாக கடந்த மூன்று வருடங்களாக கொசோவர்கள் பிரிந்து செல்ல வில்லை. ஆனால் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமை பரிபூரணமாக மறுக்கப்பட்டுள்ளது (பிரிந்து செல்வது தொடர்பான கதைக்கே இடமில்லை).

மேற்குலகின் இவ்வாறான ஒன்றுக் கொன்று முரணான நடவடிக்கை களுக்கு, சர்வதேச அரசியல் பொருளாதார தேவைகள் காரணமாக இருக்கலாம். அதுமட்டுமன்றி அனைத் துலக சமூகத்தை ஏமாற்றுவதற்கு அரசியல் தீர்வுப் பொதி எனும் ஆயுதத்தை மில்சொவிக் பயன்படு த்தாமல் இருந்தமையும் அனைத்துல கமூகம் கொசோவா பிரச்சனையில் தலையிட்டமைக்கு காரணமாக இருக்கலாம். சட்ட வல்லுனர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட் டமை போன்று, அனைத்துலக சமூகத்தை ஏமாற்றும் நோக்கில் அரசியல் தீர்வுப் பொதியை சமாதானத்துக்கான போர் எனும் கொள்கையின் முக்கிய அங்கமாக 1995ம் ஆண்டிலிருந்து சிறீலங்காவின் அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது. யாப்பு ரீதியான மாற்றங்கள் மூலம் தமிழர்களுக்கு சில சுயாட்சியுரிமைகள் வழங்கப்போவதாக கூறிக்கொண்டு தமிழர்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் நியாயப்படுத்தியது. அதாவது தீர்வுத் திட்டமானது, இராணுவ நடவடி க்கையை காவிச் செல்லும் வாகனமாகவே உருவகம் பெற்றது. ஆயினும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க முனையும் இந்த இராணுவ திட்டம் பெரும் தோல்வியை சந்தித்துள்ளதோடு, அதன் புதை குழியைத் தானே தோண்டத் தொடங்கிவிட்டது. 95ம் ஆண்டு யூலை மாதம் தமிழர்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை முடுக்கி விட்ட சிறீலங்காவின் அதிபர் சந்திரிகா, சமகாலத்தில் தீர்வுத் திட்டத்தையும் வெளிக் கொணர்ந்தார். ஆயினும் இத் தீர்வுத் திட்டைத்தை முழுமையாக விடுதலைப் புலிகள் முன் சமர்ப்பிக்காமையும், சமர்ப்பிக்க மறுப்பதும், தீர்வுத் திட்டம் தமிழர்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்த பயன்படுத்தப்படும் ஆயுதம் என்பதை தெள்ளென புலப்படுத்தி நிற்கின்றது.

---

**பேச்சுவார்த்தை நிபுணர்களின் கருத்துப்படி, இரு தரப்பையும் திருப்திப்படுத்தும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கும், தகுந்த பலன்களை அடைவதற்கும் சமபலநிலை அவசியமாகும். இதனையே, சமபலநிலை இன்றி பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதில்லை என கேட் லுவின்ஸ் அவர்களும், பேராசிரியர் வில்லியம் சாற்மானும் குறிப்பிடுகின்றனர். இரு தரப்பும் பலம் ரீதியாக சம நிலையில் இருக்கும் போது ஒரு தரப்பு மறுதரப்பின் மீது ஆதிக்கம் செலுத்த முயலாது.**

---

அதுமட்டுமன்றி, இராணுவ நடவடி க்கையை முன்னெடுப்பதில் அரசு காட்டும் அக்கறை போன்று குறிப்பிட்ட தீர்வுப் பொதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை அமுல்படுத்துவதில் அக்கறை

நிராகரித்துள்ளது. அதாவது, தமிழர்கள் ஒரு தேசிய இனம், இலங்கையின் வட–கிழக்கு பாகங்கள் தமிழர்களின் பாரம்பரிய தாயக பிரதேசம், தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள், மலையகத் தமிழர்கள் அனைவரும் குடியுரிமைக்கு உரித்துடையவர்கள் போன்ற தமிழர்களின் அபிலாசை களை இந்த தீர்வுப் பொதி நிராகரித்துள்ளது. அது மட்டுமன்றி தீர்வுப் பொதியானது உள்ளடக்கத்தில் சிறுத்து வருவதானது அது அனைத்துலக சமூகத்தை ஏமாற்ற பயன்படுத்தப்படும் கருவி என்பதை நிரூபித்துள்ளது.

சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 60,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர். 1 மில்லியனுக்கு அதிகமானோர் தமது தாயகத்திலேயே அகதிகளாக்கப்பட்டு ள்ளனர். இதே வேளை பெரும் திரளான மக்கள் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் கோரியு ள்ளனர். இந்த நிலை அனைத்துலக சமூகத்தின் ஆன்மாவை தட்டி யெழுப்பாது எனின் சுய தேவையே இலங்கை இனப் பிரச்சனையில் அனைத்துலக சமுதாயம் தலையிடு வதற்கு காரணியாக அமையும் என்பது உண்மை.

'ஒவ்வொரு யுத்தத்துக்கும் ஓர் அரசியல் தீர்வு உண்டு' எனக் கூறினார் மொறாக்கோ மன்னர் ஹாசன். இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டுமாயின் கொண்டு வரப்படும் தீர்வு, சிங்கள மக்களினதும், அவர்களது அரசாங்கத்தையும் திருப்திப்படுத்துவதாக மட்டுமன்றி தமிழர்களையும் திருப்திப்படுத்துவதாக அமைவதும் அவசியம். ஆயினும் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைய சில முன் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தை நிபுணர்களின் கருத்துப்படி, இரு தரப்பையும் திருப்திப்படுத்தும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கும், தகுந்த பலன்களை அடைவதற்கும் சமபலநிலை அவசி யமாகும். இதனையே, சமபலநிலை இன்றி பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதில்லை என கேட் லுவின்ஸ் அவர்களும், பேராசிரியர் வில்லியம் சாற்மானும் குறிப்பிடுகின்றனர். இரு தரப்பும் பலம் ரீதியாக சம நிலையில் இருக்கும் போது ஒரு தரப்பு மறுதரப்பின் மீது ஆதிக்கம் செலுத்த முயலாது. அது மட்டுமன்றி சமபல நிலையானது சமத்துவ சூழ்நிலையை உருவகித்துக் கொடுக்கின்றது.

## மூன்றாம் தரப்பின் தலையீடு சமபலத்தை உருவாக்கும்

சமபலநிலையின்மையானது பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடை பெறுவதை பாரிய அளவில் பாதிப்பதோடு, பேச்சுவார்த்தையினால் பெறப்படும் முடிவுகளையும் நிர்ணயிக்கின்றது. பலம் மிகுந்த ஒரு தரப்பால் பேச்சுவார்த்தை நிகழ்வுகளை கட்டுப்படுத்த முடியும். அவ்வாறே அத் தரப்பால் தான் விரும்பும் முடிவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது பொதுவாக பேச்சுவார்த்தைகளின்போது, பலம் வாய்ந்த ஒரு தரப்பு மறு தரப்பின் மீது தனது ஆதிக்கத்தை செலுத்த முனைவதோடு, பேச்சுவார்த்தைகளை தனக்கு சாதகமாக மாற்ற முயலும். இவ்வாறான சூழ்நிலையில் ஒரு தரப்பின் கை ஓங்கிய நிலையிலும், மறு தரப்பு கையாலாக நிலையிலுமே இருக்கும்.

சமபலநிலையற்ற சூழலில் பலம் மிகுந்த மூன்றாம் தரப்பொன்றின் தலையீடு

குறைந்த தரப்பின் பலத்தையும், பலம் மிகுந்த தரப்பின் பலத்தையும் பேச்சுவார்த்தை மேடையில் சமநிலைப்படுத்தும். இஸ்ரேல் – பலஸ்தீனிய பிரச்சனையில் அமெரிக்க தலையிட்டு சமபலநிலையை தோற்று விப்பதில் பிரதான பங்கு வகித்தது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குட் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்து படையினர் விலக்கப்படுவதானது அரசுக்கும் தமிழர்களுக்கும் இடை யிலுள்ள சமபலநிலையின்மையை இல்லாதொழிப்பதோடு இருதரப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைவதற்கு வழி கோலும். இது ஒரு கற்பனையோ அன்றேல் நடைமுறையில் சாத்தியமற்ற விடயமோ அல்ல. உதாரணமாக தற்போதைய கொலம்பிய அதிபரான மதிப்புக்குரிய ஒன்றே பிறசர்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது தனது நாட்டில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களி லிருந்து படை விலக்கப்படுவதை வலுயுறுத்தினார். இதன் மூலம் பெரும்பான்மை கொலம்பிய மக்களின் ஆதரவைப் பெற்று அவரால் ஆட்சியமைக்க முடிந்தது. இதே போன்று கொசோவாவிலிருந்து

---

**திம்புப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட தமிழர்களின் நான்கம்ச அபிலாசையை இந்த தீர்வுப் பொதி நிராகரித்துள்ளது. அதாவது, தமிழர்கள் ஒரு தேசிய இனம், இலங்கையின் வட–கிழக்கு பாகங்கள் தமிழர்களின் பாரம்பரிய தாயக பிரதேசம், தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள், மலையகத் தமிழர்கள் அனைவரும் குடியுரிமைக்கு உரித்துடையவர்கள் போன்ற தமிழர்களின் அபிலாசைகளை இந்த தீர்வுப் பொதி நிராகரித்துள்ளது.**

---

சேர்பியப் படைகளையும், விசேட பொலிசாரையும் விலக்கிக் கொள்ளு மாறு ஐக்கிய நாடுகள் அழைப்பு விடுத்துள்ளமையானது பேச்சு வார்த்தைக்கு முன் முயற்சியாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து படைகள் விலக்கப்பட வேண்டியதன் அவசியத்தை தெளிவுபடுத்தி நிற் கின்றது.

## தமிழர் தாயகத்தினதும் தமிழர்களினதும் பாதுகாப்பு விடுதலைப் புலிகளிடம்

படை விலகல் என்பது சம பலநிலையின்மையை இல்லா தொழிப்பதோடு பேச்சுவார்த்தைக்கான பாதையை உருவகித்துக் கொடுக்கும். மேலும் தமிழர் பகுதிகளிலிருந்து படைகள் விலக்கப்படுவது, தமிழர் களுக்கு அமைதியையும் பாது காப்பையும் வழங்கும். இது தொடர்பாக கொலம்பிய அதிபர் முன்வைத்துள்ள மற்றுமொரு கருத்து என்னவெனில், இராணுவ ஆக்கிர மிப்பிற்கு முன் ஆக்கிரமிப்புப் பிரதேசங்கள் போராளிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. அதே போன்று பேச்சுவார்த்தைகள் வெற்றி கரமாக முடியும் பட்சத்தில் அப் பிரதேசங்கள் மீளவும் போராளிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கப் போகின்றன. ஆகவே அரச படையினர் தொடர்ந்து ஒரு பிரதேசத்தில் நிலைகொள்ளின் அது பொதுமக்களின் உயிரிழப்பிலேயே

பார்க்கும்போது தமிழர் தாயகத்தி பாதுகாப்பை விடுதலைப் புலி ளாலேயே நிலைநாட்ட முடியும். தமி மக்களை படுகொலை செய் குற்றவாழியான சிங்கள இராணு வத்தால் அல்ல.

பலப் பிரயோகத்தை மட்டு சமபலநிலையை நிர்ணயிக்கு மூலாம்சமாக கூறுவதற்கில்லை பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளு இருதரப்பினரையும் சட்டபூர்வமா ஏற்பதும் பேச்சுவார்த்தையில் அவர ளின் பங்கை அங்கீகரிப்பது முக்கியமாகும். வெள்ளை மாளிகை யில் திரு ஜெரி அடெம்ஸையு அல்பேனிய தலைவர்களையு அமெரிக்க அதிபர் பில் கிளின்ர அழைத்துப் பேசியமை பலம் குறைந் தரப்பாக இருப்பினும் ஒரு தரப் சமபலநிலையைப் பெறுவதற் சட்டபூர்வ அங்கீகாரத்தின் தேவையை வலியுறுத்தி நிற்கின்றது.

இவ்வாறான அணுகுமுறையை பல நாட்டுப் பிரச்சனைகளில் அனை த்துலக சமூகம் கடைப்பிடித்து வருகின்றபோதும், இலங்கைப் பிரச் னையில் மேற்கண்ட அணுகுமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. சிறிலங்க அரசிற்கு ஆயுதங்கள் விற்பனை செய்வது, படையினருக்கு பயிற் வழங்குவது போன்ற அனைத்துல சமூகத்தின் செயற்பாடுகள் சம பலநிலையின்மையை அதிகரிப்பதற்கு வழிகோலுகின்றன. அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்தியுள்ள தானது பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனை தீர்க்கப்படுவதை பெரிதளவு பாதித்துள்ளதோடு சம பலநிலையின்மையை அதிகரிக்கும் செயலாகவே அமைகின்றது. ஆயினும் விடுதலைப் புலிகள் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் சமபலநிலை உருப்பெறுவதோடு, பேச்சுவார்த்தை மூலம் கொண்டு வரப்படும் தீர்வை தமிழ் மக்களை உண்மையாக பிரதிநிதித்துவப்படுத்தும் புலிகள் அமுல்படுத்துவார்கள் என்பது உண்மை. தற்போது கொசோவாவில் உள்ள பிரச்சனை தொடர்பாக மதிப்புக்குரிய ரிச்சார்ட் கோல்புறோக் குறிப்பிடுகையில் அல்பேனியர்களின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு தகுந்த ஒரு தலைமை இல்லை என தெரிவித்துள்ளார். ஆனால் இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமை ஒன்று அங்கு உள்ளது. இலங்கையில் சமாதானம் கொண்டு வரப்பட வேண்டுமாயின் அந்தத் தலைமையும், அதன் பங்கும் சர்வதேச சமூகத்தால் உணர்ந்து கொள்ளப்படவேண்டும்.

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்

சமபலநிலையற்ற ஒருதரப்பின் போரா ட்ட நோக்கத்தை சட்டபூர்வமாக அங்கீகரிப்பதன் மூலம் இரு எதிராளிகளுக்குமிடையில் சம பலநிலையை தோற்றுவிக்கலாம். ஒரு பிரச்சனைக்கு கொடுக்கப்படும் வரைவிலக்கணமே அது தொடர்பாக எடுக்கப்படும் முடிவுகளுக்கு முதற் படியாகும். பிரச்சனை தொடர்பான வரைவிலக்கணமே கொள்கையை வகுத்துக் கொடுக்கின்றது. திம்புப் பேச்சுவார்த்தைகள் தோல்வி யடைந்ததற்கு, தமிழர்களின் சுயநிர்ணய உரிமை சிறிலங்கா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாமையே பிரதான காரணியாகும். அண்மையில் சர்வ தேச அரங்கில் நடந்த நிகழ்வுகள்,

www.tamilarangam.net



உலக அரங்கு

# மேற்குநாடுகள் செர்பியா மீது தாக்குதல் நடத்துமா?

## கொசோவோ:

யூகோஸ்லாவியாவின் மாகாணங்களில் ஒன்றான கொசோவோவில் அண்மையில் இடம்பெற்ற இரு படுகொலை நிகழ்ச்சிகளை அடுத்து அங்கு நடைபெறும் உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் எனும் கோரிக்கை சர்வதேச மட்டத்தில் வலுப்பெற்று வருகிறது. இதற்கு அமைவாக செர்பியாவின் முக்கிய கேந்திர நிலைகள் மீது விமானத் தாக்குதலை நடாத்துவது பற்றி ஐரோப்பிய கூட்டமைப்பும், 'நேட்டோ'வும் கலந்தாலோசித்து வருகின்றன.

கொசோவோவில் உள்ள அல்பேனிய இனத்தவரை அழித்தொழிக்கும் முயற்சியில் செர்பியப் படையினர் ஈடுபட்டுள்ளனர்' எனக் குற்றம் சுமத்திய பிரித்தானியா, செர்பியா விரைவில் நேட்டோவின் இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாகலாம் என்றும் எச்சரித்தது.

கடந்த செப்டெம்பர் 26ம் திகதி கொசோவோவின் (மத்திய) பகுதியில் அமைந்துள்ள 'ஒப்றிஜா' எனும் நகருக்கருகில் உள்ள காட்டுப்பகுதியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனப் 16 பேர் படுகொலை செய்யப்பட்டமை பற்றிக் கூறிய பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் றொபின் குக், இது யுத்தத்தின் ஒரு அங்கமல்ல, மாறாக இரக்கமற்ற படுகொலை' எனக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 'இன ரீதியான வெறுப்பைக் காட்டும் இத்தகைய நடவடிக்கைகள் மன்னிக்கப்பட முடியாதவை' எனத் தெரிவித்துள்ளார். 'ஒப்றிஜாவில்' சிதைவு படுத்தப்பட்ட உடல்கள் இராஜதந்திரிகள், செய்தித்துறையினர் மற்றும் மனித உரிமைக்காகப் போராடுபவர்களுக்குக் காட்டப்பட்டதனை அடுத்தே செர்பியப் பொலிசார் மற்றும் யூகோஸ்லிய இராணுவத்தினர் மீது இந்த சமீ




பத்தைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

10 வயதுச் சிறுவன் ஒருவனின் தொண்டை கிழிக்கப்பட்டு, அவனின் தாயாரின் மூளை சிதறடிக்கப்பட்டு, இன்னோர் பெண் உறவினர் ஒருவரின்

எல்லோரும் தலையின் பின்புறத்தில் சுடப்பட்டிருந்தனர். தமது இருப்பிடங்களில் செர்பிய துருப்பினரால் முற்றுகையிடப்பட்டதனை அடுத்து அருகிலுள்ள காடுகளில் இவர்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்தனர். இவர்களது சிதைவுற்ற உடல்கள் இரு நாட்களின் பின்பே கண்டு பிடிக்கப்பட்டிருந்தன.

கடந்த 8 மாதங்களாக கொசோவோவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரில் இற்றை வரை 800 பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன் 3 இலட்சத்துக்கு அதிகமானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'அண்மையில் இடம்பெற்ற படுகொலைகள் 'நேட்டோவை' உரிய நடவடிக்கைகள் எடுக்க அழுத்தம் கொடுத்துள்ளன' எனக் கூறிய கனேடிய வெளிவிவகார அமைச்சர் லொயிட் அக்ஸ் வோர்தி 'இந்த மனிதப் பேரழிவு இடம் பெறுவதை நாம் அனுமதிக்க முடியாது' எனத் தெரிவித்துள்ளார்.

ஒப்றிஜா படுகொலை நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்பதாக அருகிலுள்ள இன்னுமோர் கிராமத்தில் 13 அல்பேனிய ஆண்களும் கொல்லப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கொசோவோ விடுதலை இயக்கப் போராளிகளைக் களை எடுப்பதாகக் கூறிக்கொண்டு, கனரக ஆயுதங்கள் சகிதம் உலங்குவானூர்திகள் துணையுடன் புறப்பட்ட 26000 யூகொஸ்லாவிய படைவீரர்களும், பொலிசாரும் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 400க்கு மேற்பட்ட அல்பேனிய இனக் கிராமங்களை திட்டமிட்ட முறையில் அழித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு வழங்கவதற்கென வைத்திருந்த உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் அருகி வருகின்றன என சர்வதேச உதவி நிறுவனங்கள் கவலை கொண்டுள்ளன.

மீதமிருப்பதைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் செர்பியப் படையினர் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கொசோவோவில் குளிர் காலம் தொடங்கி விட்டதால் காடுகளில் தங்கியிருக்கும் அல்பேனிய இனத்தவர் பெரும் கஸ்டங்களுக்குள்ளாகின்றனர். இன்னும் 2,3 கிழமைகளில் மேற்கு நாடுகள் தலையிடாவிட்டால் இப் பொதுமக்கள், குறிப்பாக குழந்தைகளும், வயது வந்தவர்களும் குளிர்க் கொடுமையினாலும், உணவின்றியும் சாவின் விளிம்பிற்குத் தள்ளப்படுபவர் எனப் பலரும் விசனப்படுகின்றனர்.

கொசோவோ அல்பேனியர் மீதான செர்பியத் துருப்பினரின் தாக்குதல்கள் நிறுத்தப்படாவிட்டால் நேட்டோவின் விமானங்கள் தாக்குதலில் ஈடுபடும் எனக் கடந்த யூன் மாதத்தில் எச்சரிக்கை விடப்பட்டது.

எனினும் கடந்த மாதத்தில் போராளிகள் மீதான தாக்குதல்கள் கிராமங்கள் மீது திருப்பப்பட்டதன் விளைவாக சடுதியாக பல்லாயிரக்கணக்கானோர் இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் மேற்கு நாடுகளோ

கொசோவோவின் அயலவரான அல்பேனியா அதிகாரப்போட்டி சம்பந்தமாக வீதிச் சண்டையில் ஈடுபட்டிருந்தமையாலும் செர்பியரின் அடாவடித்தனம் பற்றிக் கூடிய கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது. இது செர்பியருக்குப் பெரும் சாதகமாக அமைந்தது.

எனவெ செப்டெம்பர் மாதம் 23ம் திகதி ஐ.நா பாதுகாப்புச் சபை கொசோவோ சம்பந்தமாக ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியது. சகலவிதமான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்படியும், மனிதப்பேரழிவு ஏற்படுவதைத் தடுக்க சகலவிதமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், கொசொவோவின் அல்பேனிய இனத்தவருடன் அரசியல் ரீதியான பேச்சவார்த்தைகள் நடாத்தப்படல் வேண்டும் எனவும் செர்பிய அரசை இத்தீர்மானம் கோருகிறது.

ஐ.நா சபையின் மேற்கூறப்பட்ட கோரிக்கைகளை முழுதாக நிறைவேற்றாவிட்டால் இன்னும் 2 கிழமைகளுக்குள் 'நேட்டோ' விமானங்கள் செர்பியா மீது தாக்குதல்களை ஆரம்பிக்கும் என அமெரிக்கா அக்டோபர் மாதம் எச்சரிக்கை விடுத்தது. இதன்படி செர்பியாவில் உள்ள 600 விமான எதிர்ப்புத் தளங்களும், கட்டுப்பாட்டு நிலையங்களும் நேட்டோவின் தாக்குதலுக்கு ஆளாகலாம். ஆனால் இத்தாக்குதல்கள் தமது இலட்சியத்தை குறுகிய காலத்தில் அடையாவிட்டால் மேலதிக தாக்குதல் நடாத்தப்படும் என்றும் இதனால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

இதேவேளை செர்பியா மீது தாக்குதல் நடாத்தப்படுவதற்கு அதன் நேசநாடான ரஸ்யா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இவ்விரு நாடுகளும் பண்பாடும் (ஸ்லாவிக் பரம்பரையினர்) மற்றும் மதரீதியில் நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன.

பாதுகாப்புச் சபையின் அனுமதி இல்லாது செர்பியா மீது நடாத்தப்படும் எந்தவொரு தாக்குதலும் ஐ.நா விதிகளை அப்பட்டமாக மீறுவதாக அமையும் எனக் கூறிய ரஸ்யா, பேச்சுவார்த்தை மூலமாக ஒரு தீர்வு காணப்படுவதற்கும் இது தடைக்கல்லாக விளங்கும் எனத் தெரிவித்துள்ளது. இதேவேளை பாதுகாப்புச்சபையின் இன்னுமோர் நிரந்தர அங்கத்தவரான சீனாவும் செர்பியா மீது எந்தவொரு இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சீனாவானது வழமையாக எந்தவொரு உள்நாட்டு விவகாரத்திலும் ஐ.நா வின் இராணுவ தலையீட்டினை எதிர்த்து வந்துள்ளது. இச்செயலை அனுமதித்தால் தனது உள்நாட்டு விவகாரம் எனக் கருதப்படும் தைவான் மற்றும் திபத்து சம்பந்தமான விவகாரங்களிலும் இதே வழி பின்பற்றப்படலாம் என அஞ்சுவதாகத் தெரிகிறது.

கொசோவோவின் 2 மில்லியன்

**சாள்ஸ் தேவசகாயம்**

மக்களில் 90 வீதமானோர் அல்பேனிய இனத்தவராவர். பழைய யூகோஸ்

இனத்தவர் இழந்தனர். தொடர்ந்து இடம்பெற்ற பொலிஸ் அடாவடித்தனங்களை அடுத்து உருவாகிய கொசோவோ விடுதலை இயக்கமானது



கொசோவோவும் யூகோஸ்லாவியாவின் முன்னாள் மாகாணங்களான பொஸ்னியா, குரோசியா போன்று சுதந்திர நாடாக மாறவேண்டும் என ஆயுதப் போராட்டத்தில் இறங்கியுள்ளது.

ஐ.நா சபையின் நிபந்தனையை அடுத்து கொசோவோவால் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது என்றும் தமது துருப்பினர் முகாம்களுக்குத் திரும்புகின்றனர் என்றும் செர்பிய அரசு அறிவித்தது. இதே சமயம் சுமுக நிலையை ஏற்படுத்த இடைக்கால அரசொன்றை ஏற்படுத்தியுள்ளதாக செர்பியா தெரிவித்த போதும் தமது பங்கு பற்றல் இன்றி உருவாக்கப்பட்ட இவ் அரசை அல்பானிய இன அரசியல் தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

அல்பேனிய இனத்தவர் மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு செர்பியா மீது இராணுவ பலத்தை பிரயோகிப்பதா எனும் முடிவுக்கு வர நேட்டோ நாடுகள், ஐ.நா செயலாளர் நாயகம் கோபி ஆனனின் அறிக்கையை எதிர்பார்த்திருந்தனர்.

'கொசோவோவில் இடம் பெற்ற அநேகமான தீச்செயலிற்கு செர்பியப் படையினரே பொறுப்பு என்பது சந்தேகத்துக்கிடமின்றித் தெளிவாகியுள்ளது' எனக் கூறிய கோபி ஆனன் 'ஐ.நா சபைத் தீர்மானம் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்திய பிறகும் கூட செர்பிய படைகள் தொடர்ந்து தமது தாக்குதல்களை அதிகரித்தனர்' எனத் தெரிவித்துள்ளனர்.

மத்திய தரைக் கடலில் ரோந்து புரியும் யுத்தக்கப்பல்களும் விமானங்களும் தற்பொது யூகோஸ்லாவிய நிலைகள் மீது தாக்குதல் நடாத்த பாவி க்கப்படலாம். இத்தாக்குதலில் 11 நேட்டோ நாடுகளின் 62 கப்பல்களும் 170 விமானங்களும் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை எதுவித இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

அமெரிக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணினம் புரட்சி சக்தியாக.....

ஆசியாவில் வாழும் மக்கள் சமுதாயங்கள் பெரும்பாலும் இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டவை. அதிலும் தமிழ் சமூகம் அதிகமான கட்டுப்பாடுகளை கடைப்பிடித்தது. பழமைவாதத்திலும் மூட நம்பிக்கைகளிலும் ஊறிப்போன நமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகின்றது. பழைய இலக்கியங்கள், சித்தாந்தங்கள், வேதாந்தங்களும் பெண்ணடக்கு முறையை நியாயப்படுத்தியே வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்ற பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்கு முறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவிச் சிதைத்து வருகின்றது.

தமிழருக்கு விடுதலை கோரிப் போராடிவரும் எமது இயக்கம் தமிழ்ப் பெண்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையை மாற்றாமல் முழுமையான விடுதலை பெற முடியாது என உணர்ந்தது. அதனால் நம் பெண்களை ஆரம்ப காலங்களில் அரசியல் மயப்படுத்தி ஒரு அணியாகத் திரட்டி, பெரும் புரட்சியையே நடத்தியது. இந்தப் புரட்சியின் விளைவாக இன்று பல தமிழ் இளம் பெண்கள் ஆயுதங்களுடன் களத்தில் நிற்கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி 1985ஆம் ஆண்டில் எமது தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் தோற்றம் பெற்றது. ஆரம்பத்தில் நூறுக்கும் குறைவான பெண்களை மட்டுமே கொண்டிருந்த இப்படையணி இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சி பெற்ற பெரும் பிரிவுகளுள் ஒன்றாக மாறிவிட்டது. பல் துறைகளிலும் தன் காலைப் பதித்து வேரோடியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி கடந்த பத்தாண்டுகளில் கண்ட களங்கள் ஏராளம். யாராலும் நம்பமுடியாத–உலக நாட்டுப் பத்திரிகையாளர்களும் இராணுவ வல்லுநர்களும் மூக்கில் விரல் வைக்கின்ற அளவுக்கு மகளிர் படையணியின் சாதனைகள் ஏராளம். சாதாரண வாழ்வு வாழ்ந்தபோது உள்ளடங்கிக் கிடந்த ஆற்றல்களெல்லாம் இராணுவ அணியாக மாறி எதிரிமுன் நிற்கும்போது உடைத்துக்கொண்டு வர. . .பெண் போராளிகளின் தாக்குதல் வேகமும் உக்கிரமும் நிறைந்தது என்ற கருத்து இராணுவ வீரர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

சில காலங்களுக்கு முன் யாழ்ப்பாண அரச அதிபர் சிறிலங்காவின் தலை நகருக்குச் சென்றிருந்தபோது அவரைச் சந்தித்த சிங்களச் சிப்பாய் ஒருவன் “பெண் புலிகளைத்தான் அழிக்க வேண்டும். அவர்கள்தான் விடாது எங்களை விரட்டி விரட்டித் தாக்குகிறார்கள்” என்று அங்கலாய்த்துக் கொண்டானாம்.

அசாதரணமான, தன்னம்பிக்கையும் துணிச்சலும் மிக்க பெண் போராளிகள் பங்கேற்ற சண்டைகளை நோக்கினால் அவர்களது வளர்ச்சிப் போக்கு நன்கு புலப்படும்.

## 1986

மன்னார்–அடம்பன் இராணுவத் தளம் மீதான தாக்குதல். விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதற் சண்டை இது. இச் சண்டையிலேதான் முதன் முதலாக சிங்களச் சிப்பாய்கள் உயிருடன் பிடிக்கப்பட்டனர். காயமடைந்த லெப். கேணல் விக்ரரை பெண்புலிகள் கள

❈ வவுனியா, முல்லைத்தீவு, மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில் முன்னேற முயன்ற சிங்களப் படைகளுடன் பரவலாக பல இடங்களிலும் நடந்த சண்டைகளில் மகளிர் படையணி பங்குபற்றியது.

❈ மயிலியதனை மினிமுகாம் தகர்ப்பில் பெண் போராளிகளின் ஒரு அணி பங்கேற்றது.

❈ யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலைய இராணுவ முகாம் தகர்ப்பில் பெண் போராளிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் கலந்துகொண்டனர். இத்தாக்குதலில் இருபத்திரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். கொமாண்டோ ரகத் தாக்குதலில் மகளிர் படையணி பங்கேற்றது இதுவே முதற்தடவை.

❈ பலாலி படைமுகாமிலிருந்து சிறிலங்காப் படைகள் தெல்லிப்பளை நோக்கியும் அச்சுவேலி நோக்கியும் முன்னேற முயன்ற போது நடந்த நேரடிமோதலில் ஈடுபட்டனர்.

❈ வடமராட்சியில் சிங்களப் படைகள் நடாத்திய ‘ஒப்பரேசன் லிபறேசன்’ நடவடிக்கையின்போது எதிர்த்தாக்குதலில் பரவலாக ஈடுபட்டனர்.



❈ குரும்பசிட்டியில் மினிமுகாம் மீதான தாக்குதலிலும் பங்குகொண்டனர்.

❈ நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் தளம் அமைத்திருந்த சிங்களச் சிப்பாய்கள் மீது கரும்புலி கப்டன் மில்லர் வெடிமருந்து நிறைந்த வாகனத்தால் தாக்கினார். கரும்புலித் தாக்குதலைத் தொடர்ந்து ஆர்.பி.ஜி அடித்து சண்டையை ஆரம்பித்து வைத்தவர் ஒரு பெண் போராளி. இச்சண்டையில் மகளிர் படையணி பங்கேற்றது.

❈ கோப்பாயில் இந்திய இராணுவத்துடனான சண்டையில் முதல் பெண்புலி 2ஆம் லெப். மாலதி வீரச்சாவடைந்தார்.

❈ இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் ‘பவான் நடவடிக்கை’யை நடத்தியபோது அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கெரில்லாத் தாக்குதல்களில் பெண் போராளிகளும் ஈடுபட்டனர்.

❈ யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உலங்குவானூர்தி மூலம் தரையிறங்கிய இந்திய இராணுவம் மீதான தாக்குதலில் பங்கேற்றனர்.

❈ உரும்பிராய்–செல்வபுரம் பகுதியில் இந்திய இராணுவத்தினரின் சுற்றி வளைப்பை உடைக்கும் தாக்குதலில் டாங்கி ஒன்று சேதமுற்றது.

## 1988

‘ஒப்பரேசன் செக்மேற் 1,2,3’ நடவடிக்கையை இந்திய இராணுவம் மணலாற்றுக் காட்டில் நடாத்தியபோது, எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. விசுவமடு, இரணைப்பாலை, தேவிபுரம், நித்திகைக்குளம், வன்னி ஆகிய இடங்களில் வைத்து இந்திய இராணுவத்தின் மீது பதுங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது. மணலாற்றிலுள்ள எமது தளங்களில் ஒன்றைக்கூட எதிரியிடம் விடக்கூடாது என்ற உறுதியுடன் எம் தலைவரினால் நேரடியாக நெறிப்படுத்தி நடாத்தப்பட்ட இச் சண்டையில் இந்திய இராணுவம் எம்மிடம் தோற்றது.

❈ வேணாவிலில் பெண் போராளிகளின் முகாமைச் சுற்றி வளைக்க இந்திய இராணுவம் முயன்றபோது ஏற்பட்ட நேரடி மோதலில் பெண் போராளிகள் மட்டுமே பங்கெடுத்தனர்.

## 1989

❈ மணலாற்றில் சிங்களச் சிப்பாய்கள் மேல் தாக்குதல் நடாத்தியதில் இருபத்தொரு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

❈ தேசத் துரோகிகளை நெளுக்குளத்திலிருந்து செட்டிக்குளம், முசல்குத்தி, மன்னார், குஞ்சுக்குளம் ஊடாக தலைமன்னார் வரை விரட்டி யடித்த தாக்குதலில் பெண் போராளி களின் அணி ஒன்று பங்கேற்றது. இச்சண்டை 1989 டிசம்பரிலிருந்து 1990 சனவரிவரை நடந்தது.

## 1990

❈ கொக்காவில் படைமுகாம் தகர்ப்பில் பங்கேற்ற பெண் போராளிகளில் ஆறுபேர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். அச்சண்டை இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த பின் பெண் போராளிகள் பங்குகொண்ட முதல் சண்டை. இச்சண்டையில் கப்டன் உசா வீரச்சாவைத் தழுவிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

❈ யாழ்ப்பாணக் கோட்டை மீதான முற்றுகைப் போரில் மகளிர் படையணி பங்கெடுத்தது. பல பெண் போராளிகள் இம் முற்றுகைப் போரில் வீரச்சாவடைந்தனர்.

❈ மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி முன்னேற முயன்ற சிங்கள இராணுவத்துடனான மோதலின்போது கப்டன் அஞ்சனா வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இம்மோதலின் போது எதிரிப்படையின் விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

❈ பின்னர் கோட்டை கைப்பற்றப்பட்ட சண்டையிலும் பெண் போராளிகள் கலந்துகொண்டனர்.

❈ ஆண்டின் இறுதிப் பகுதியில் பலாலித் தளத்தைச் சூழவுள்ள பகுதிகளில் எதிரியை முன்னேற விடாமல் தடுக்கும் வகையில் காவலரண்கள் அமைத்துக் காவற் கடமையில் ...

போராளிகளின் காவலரண் அமைந்திருந்த பக்கம் சிங்களப் படைகளுக்கும் மகளிர் படையணிக்குமிடையே பெரும் சண்டை நடந்தது. இச் சண்டையில் கப்டன் ஆ... கப்டன் அஜித்தா ஆகியோர் வீரச்சாவடைந்தனர். இச் சண்டை பெண் போராளிகளின் தனிச் சண்டை என்பதோடு ஒரு இராணுவத்தினனின் உடலும் ஆயுதங்களும் பெண் போராளிகளால் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❈ மாங்குளம் படைமுகாம் தகர்க்கப்பட்டது. இத்தாக்குதலில் பெருமளவில் பெண் போராளிகள் பங்கேற்றனர். இத்தாக்குதலில் முகாம் தகர்க்கப்பட்டதுடன் நூற்றுப் பதினைந்து படையினர் பலியாகினர்.

## 1991

❈ சிலாவத்துறை–கொக்குப்படையான் இராணுவமுகாம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் ஒன்பது பெண் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

❈ பூவரசங்குளத்தில் மாடுகளின் பின் மறைந்தவாறு முன்னேறிய இராணுவத்தை வழி மறித்துத் தாக்கினார்கள்.

❈ ஆனையிறவு ஆகாய, கடல் வெளிச்சமர் ஒரு மாதகாலம் தொடர்ந்தது. மகளிர் படையணியின் பெரும்பகுதி இச் சமரில் பங்கெடுத்தது. நூற்று இருபத்திமூன்று பெண் போராளிகள் இதில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

❈ ‘ஒப்பரேசன் மின்னல்’ நடவடிக்கையைச் சிங்கள இராணுவம் மணலற்றில் ஆரம்பித்தது. இராணுவத்தை எதிர்த்து பெண் போராளிகளும் சண்டை பிடித்தனர்.

❈ கொக்கிளாயிலிருந்து கொக்குத் தொடுவாயைக் கைப்பற்றும் நோக்கில் முன்னேறிய சிங்களப் படைகளுடனான மோதலில் மூன்று அதிகாரிகள் உட்பட முப்பது படையினர் கொல்லப்பட்டனர்.

❈ கள்ளிச்சை வடமுனையில் சிங்களப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் பெண் புலிகள் கலந்து கொண்டனர். இம் மோதலில்தான் தென் தமிழீழத்தின் முதலாவது களப்பலியான பெண்புலி லெப். நிலா வீரச்சாவடைந்தார்.

❈ மட்டக்களப்பு–மண்முனைத் துறையில் ஏற்பட்ட நேரடி மோதலில் கலந்து கொண்டனர்.

## 1992

❈ ஆயித்தியமலை–கரடியனாறுப் பகுதியில் சிங்களப் படைகளுடனான சண்டையில் பதினாறு படையினர் கொல்லப்பட்டனர். இரண்டு பெண் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

❈ கட்டைக்காட்டில் மினிமுகாம் தகர்ப்பு. ஐந்து கோடி பெறுமதியான ஆயுதங்கள் அள்ளப்பட்டன. முப்பது படையினர் கொல்லப்பட்டனர். மூன்று பெண் புலிகள் இச்சண்டையில் வீரச்சாவடைந்தனர்.

❈ மட்டக்களப்பு–கெளுத்திமடுவில் ஏற்பட்ட நேரடி மோதலில் பங்கெடுத்தனர். இம் மோதலில் சிங்களப் படைகளின் ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டன.

❈ மட்டக்களப்பு–அரந்தலாவையில் காவல் உலாவுக்குப் போன விமானப் படையினருடனான நேரடி மோதலில் கலந்துகொண்டனர். இச்சண்டையில் இருபத்தொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இருபத்தொரு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

❈ மட்டக்களப்பு–பள்ளித்திடலில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரின் முகாமைத் தகர்க்கும் சண்டையில் பங்குகொண்டனர். இச்சண்டையில் இருபது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நாற்பத்தைந்துக்கும் மேற்பட்ட ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

❈ மட்டக்களப்பு–வக்கீலையில் நடந்த நேரடிமோதலில் பங்கேற்றனர். இச் சண்டையில் ஒன்பது இராணுவத்தினர் கொல்வப்பட்டனர். ஒன்பது ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

❈ பலர்லியின் கிழக்கெல்லையான ஒட்டகப்புலத்திலிருந்து தொண்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணினம்.......

'கஜபார' என்ற பெயரிட்டு சிங்களப் படைகள் நடாத்திய தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டனர்.

❆ அளம்பிலில் எதிரியின் புயற்காற்று நடவடிக்கை முறியடிக்கப்பட்டது.

❆ அளம்பிலில் எதிரிப்படை முகாம் தகர்க்கப்பட்டது.

❆ ஜனகபுர இராணுவத்தளத்தின் காவலரண் ஒன்று தாக்கப்பட்டது.

❆ மண்கிண்டிமலையின் ஒரு பகுதி தாக்கப்பட்டது.

❆ கோட்டைக்கேணிக்கும் கொக்குத்தொடுவாய்க்கும் இடையில் வைத்து சிங்களப் படைகள் மீது பதுங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது.

❆ முந்திரிகைக் குளம் இராணுவ முகாம் தாக்கப்பட்டது.

❆ நெடுங்கேணி படைமுகாமின் ஒரு பகுதி தகர்க்கப்பட்டது.

## 1993

❆ ஆனையிறவிலிருந்து சாவகச்சேரி நோக்கி 'ஒப்பரேசன் யாழ்தேவி' என்ற பெயருடன் முன்னேற முயன்ற சிங்களப் படைகளை புலோப்பளையில் வைத்துத் தாக்கி அழித்தனர். இராணுவம் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கி ஆனையிறவுக்குச் சென்றது. படையினரின் டாங்கி ஒன்று சேதப்படுத்தப்பட்டது. இச்சண்டையில் கடற்புலிகள் மகளிர் படையணியின் தளபதிகளுள் ஒருவரான மேஜர் சுகன்யா வீரச்சாவடைந்தார்.

❆ மணலாற்றில் சிலோன் தியேட்டரடி முகாம்மீது தாக்குதல் நடாத்தப்பட்டது.

கந்தளாயில் ஏற்பட்ட நேரடி மோதலில் பங்குகொண்டனர். பதினான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பதின்மூன்று ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

❆ மண்கிண்டிமலை முகாம்மீது தாக்குதல் நடாத்தப்பட்டு முகாம் அழிக்கப்பட்டது. மணலாறு மாவட்டத்தில் இந்த ஆண்டில் அரச படைகளுக்குக் கொடுத்த மிகப் பெரிய அடி இதுவாகும்.

❆ பூநகரி இராணுவ முகாம் தாக்கியழிக்கப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ஐந்து நீருந்து விசைப்படகுகள் கைப்பற்றப்பட்டன. கடற்புலிகள் மகளிர் படையணியின் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் பாமா இச்சண்டையில் வீரச்சாவடைந்தார்.

## 1994

மட்டக்களப்பு–கட்டுமுறிப்பில் காவலுலா வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் பங்கேற்றனர். இச் சண்டையில் இருபத்தைந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

## 1995

❆ மண்டைதீவு முகாம் தகர்ப்பு

❆ 'முன்னேறிப்பாய்தல்' எனப் பெயர் சூட்டி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில் சிங்களப் படைகளால் பலாலிப் படைத்தளத்திலிருந்து முன்னேறி நடாத்தப்பட்ட தாக்குதலை 'புலிப்பாய்ச்சல்' என்று பெயர் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கை மூலம் புலிகள் இயக்கம் தோற்கடித்தது. இச் சண்டையில் பெருமளவு பெண் போராளிகள் பங்கேற்றனர். மேஜர் ரவிக்கா இச் சண்டையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

❆ புலிப்பாய்ச்சலின் ஒரு பகுதியாக காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து கடற் படைக்கப்பலான எடித்தாரா கரும்புலித் தாக்குதல் மூலம் மூழ்கடிக்கப்பட்டது. இத் தாக்குதலில் கரும்புலி மேஜர் தமிழினி, கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் மாதவி உட்பட பன்னிரண்டு பெண் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

❆ மணலாற்றுப் பிரதேசத்திலுள்ள ஐந்து இராணுவ முகாம்களின் மீது ஒரே

படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பெருமளவு பெண் போராளிகள் கலந்துகொண்டனர்.

❆ மட்டக்களப்பு 4ஆம் முச்சந்தி இராணுவ முகாம் மீதான தாக்குதலில் கலந்துகொண்டனர்.

❆ கடந்துவந்த பத்து வருடங்களில் பெரியதும் சிறியதுமாக ஏராளமான சண்டைகளில் மகளிர் படையணி பங்கேற்றிருக்கின்றது. இவற்றுள் முகாம் தகர்ப்புகள், நேரடி மோதல்கள், பதுங்கித் தாக்குதல், கெரில்லாத் தாக்குதல், அதிரடித் தாக்குதல் என பல்வேறுபட்ட சண்டைகளிலும் ஈடுபட்டு தனது தாக்கும் திறனை வளர்த்துக்கொண்டுள்ளது.

❆ மகளிர் படையணியின் முதல் சண்டையான மன்னார்–அடம்பன் தாக்குதல் நடந்த காலத்தில் பெண் போராளிகள் சிறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அனுபவம் வாய்ந்த மூத்த ஆண் போராளிகளில் வழிகாட்டலின் உதவியோடு தாக்குதல்களில் ஈடுபட்டவாறு வெவ்வேறு இடங்களில் நின்றனர். இந்திய இராணுவம் இங்கு வரும்வரை இது தொடர்ந்தது. முகாம் தகர்ப்பு என்றால் என்ன சிறு சண்டையாக இருந்தாலென்ன பெண் போராளிகளின் தாக்குதலுக்குப் பொறுப்பாக ஒரு மூத்த ஆண் போராளி வழி நடத்துவார்.

❆ இந்திய இராணுவக் காலம் வித்தியாசமானது. ஒவ்வொரு அங்குல நிலத்திலும் இந்திய இராணுவம் அவர்களுக்கு இடையால்தான் போராளிகள் நகர வேண்டும். இன்ன இடத்தில் இப்படித்தான் சண்டைவரும் என்றில்லை. எந்நேரமும் எந்த இடத்திலிருந்தும், முதுகுக்குப் பின்னாலிருந்தும்கூட வரலாம். அந்த நேரங்களில் இன்னாரின்



வழி நடத்தல் இருந்தால்தான் சண்டை பிடிக்கலாம் என்று யாருமே எதிர்பார்க்க முடியாது. சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு இடங்களில் நின்ற பெண் போராளிகள் சண்டை வந்த போதெல்லாம் தாமாகவே சண்டையை நடத்தினார்கள்.

❆ உலகின் மூன்றாவது பெரும் வல்லரசு என்று சொல்லப்பட்ட பாரத நாட்டின் படை வீரர்கள் முதன் முதலாக ஆயுதம் ஏந்திய பெண்களினால் தாக்கப்பட்டது, கொல்லப்பட்டது தமிழீழத்தில்தான். பெண் போராளிகளின் தாக்குதல்கள் வேகம் நிறைந்தவையாக இருந்தன. சங்கானை, தொட்டிலடி ஆகிய இடங்களில் நடந்த சண்டைகள் இந்திய இராணுவத்திற்கு குறிப்பிடத்தக்க இழப்பை ஏற்படுத்தின.

❆ இந்திய இராணுவக் காலத்திலேதான் காட்டிலே பலமான பாசறைகள் அமைக்கப்பட்டு புலிகள் இயக்கம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டது. அந்தக் காட்டு வாழ்க்கையின்போது பெண் போராளிகள் புடம்போடப்பட்டனர்?. நீண்ட தூரங்களை நாட்கணக்காக நடந்து, கடந்துபோய் உணவிலிருந்து – எரிபொருள்களிலிருந்து எல்லாவற்றையும் சுமந்துகொண்டு வரவேண்டியிருந்தது. குடிப்பதற்கு நீர் வேண்டுமென்பதால் கிணறுகளை

தளபதியாக நியமித்து பெண் போராளிகளுக்கென தனியான தளம் ஒன்றை அமைக்குமாறு கூறினார்.

❆ 1989ஆம் ஆண்டு காட்டிலே விடியல் என்ற பெயருடன் பெண் போராளிகளின் பாசறை அமைக்கப்பட்டது. புதிய பெண் போராளிகளுக்கு அங்கு வைத்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. காட்டு வாழ்க்கையின்போதுதான் மகளிர் படையணி தம்மை ஒரு பெரும் அணியாக – பலமான அணியாக வளர்த்துக்கொண்டது.

❆ 1990ஆம் ஆண்டு கொக்காவில் சண்டை, நல்ல சண்டை அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தது. அப்போதெல்லாம் மகளிர் படையணி ஒரு தனித்துவமான அணியாகவே சண்டைக்குப் போகத் தொடங்கியது. மகளிர் படையணிக்கென பாசறைகள் அமைக்கப்பட்டிருந்தன. தன் பாசறைகளில் பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பதும் சண்டை நேரங்களில் சண்டைக்குப் போய் வருவதுமாக ஒரு நிலையான இராணுவமாகவே மகளிர் படையணி மாறிவிட்டிருந்தது.

❆ பலாலியைச் சூழவுள்ள காவலரண்களில் கடமையில் ஈடுபட்டிருந்த காலங்களில் அடிக்கடி சண்டைகளைச் சந்தித்தது. தன்னுடைய காவலரணுக்குரிய பகுதியில் சண்டை என்றால் அது தனித்துவமான மகளிர் படையணியின் சண்டையாகவே இருக்கும்.

❆ அதற்கடுத்த கட்டமாக முன்னேறி வந்துகொண்டிருக்கும் இராணுவத்தினரை வழிமறித்து நேருக்கு நேர் மோதும் மரபுப் போர் அனுபவத்தை மகளிர் படையணி, ஆனையிறவு ஆகாய–கடல்வெளிச் சமரின்போது பெற்றுக்கொண்டது. நாட்கணக்காக குடிநீரின்றி, உணவின்றி, குளிக்கவும் நேரமின்றி எதிரியைத் தாக்கிக்கொண்டிருந்த ஒரு வித்தியாசமான அனுபவத்தை இச்சண்டை கொடுத்தது.

❆ இச்சண்டையில் மகளிர் படையணிக்கென இலக்குகள் கொடுக்கப்பட்டிருந்தன. இத்தனை காவலரண்களை அழிக்கும் பொறுப்பு உங்களுக்குரியது என மகளிர் படையணிக்கென தாக்குதல் இலக்குகள் பிரிக்கப்பட்டிருந்தன. தமக்குரிய இலக்குகளை தாமே தனியாகத் தாக்கி அழிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன் பின்னர் கட்டைக்காடு மினி முகாம் தகர்ப்பைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மகளிர் படையணிக்குக் கொடுக்கப்பட்ட இலக்குகளை படையணியின் வேவுப்புலிகளே வேவு பார்த்து பாதை காட்டினார்கள். மகளிர் படையணியின் வேவுப்புலி வீராங்கனைகள் தம்மை பலமான ஒரு அணியாக வளர்த்துக்கொண்டதும் இக்காலப் பகுதியில்தான். வேவு அணியின் பொறுப்பாளராக இருந்த கப்டன் தேனுஜா வீரச்சாவடைந்ததும் இக்காலப் பகுதியில்தான்.

❆ இதற்கு அடுத்தகட்ட வளர்ச்சியாக பூநகரிச் சண்டையைச் சொல்லலாம். முகாமை வேவு பார்ப்பதற்காக பல நாட்கணக்காக இராணுவ முகாமுக்குள்ளேயே தங்கிநின்று தகவல்களை அறிந்துவந்து வெற்றிக்கு வழி சமைத்ததில் மகளிர் படையின் வேவுப்புலிகளுக்கு முக்கிய பங்குண்டு. சண்டையின்போது சில ஆண் போராளிகளின் அணிகளுக்குக் கூட பெண் வேவுப்புலிகளே வழி காட்டியாகச் சென்றனர்.

❆ தமக்குக் கொடுக்கப்பட்ட காவலரண்களை அழித்து பாதையை ஏற்படுத்திக்கொண்டு உள்நுழைந்து பிரதான தளம் மீதான தாக்குதலிலும் மகளிர் படையணி பங்கேற்றது.

❆ மண்டைதீவுத் தாக்குதல் ஒரு வேகத் தாக்குதலாகும். அதிகாலையில் ஆரம்பித்து மதியம் முடிவடைந்த அந்த குறுகிய நேரச் சண்டையில் பெண் போராளிகள் மிகச் சிறப்பாகப் பங்காற்றினர்.

❆ விடுதலைப் புலிகள் மகளிர் படையணியில் 1987இல் பதினான்கு பேரும் 1988இல் பதினொரு பேரும் 1989இல் ஒருவரும் 1990இல் எழுபத்திரண்டு பேரும் 1991இல் இருநூற்றிப்பத்துப் பேரும் 1992இல் எழுபத்தைந்து பேரும் 1993இல் நூற்றிருபத்திநான்கு பேரும் 1994இல் பன்னிரண்டு பேரும் 1995இல் யூலைவரை நூற்றி அறுபது பேருமாக வீரச்சாவடைந்துள்ளனர்.

❆ இந்தப் பத்து வருடங்களில் பெற்ற அனுபவங்கள் மகளிர் படையணியை ஒரு தனித்துவமான படைப்பிரிவாக எதற்கும் தயார் நிலையில் நிற்கும் பலமான இராணுவ அமைப்பாக வளர்த்து விட்டிருக்கிறது.

❆ சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியில் பெண்கள் சமஉரிமை பெற்று சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாகத் தமிழீழத்தைக் கட்டி எழுப்பும் பணியில் ஆயுதமேந்திய தமிழ் இளம்பெண்கள் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றனர். ❆

### தாய்மண் விடிவுக்கு....

*வெளிநாடுகளில் விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளராய் இருந்து சிறுக சிறுக நிதி சேகரித்து தமிழீழத்திற்கு அனுப்பியவர், இரவு பகல் பாராது பனி வெய்யில் பாராது நாட்டின் விடுதலைக்காக உழைத்தவர் என்றார். மாவீரர் கப்டன் கஜன் கவிஞனாக நாடக ஆசிரியனாக பத்திரிகையாளனாக நின்று தமிழர் போராட்டத்தை முன்னெடுத்து செல்வதில் நாதனுடன் இணைந்து பணியாற்றினார் என்றார். மாவீரர் மேஜர் சுரேந்தி ஜேர்மனியில் விடுதலைப்புலிகளின் பணியகம் இக்கட்டான நிலையில் இருந்த போது அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடத்தினார். விடுதலைப்புலிகள் நிதி நெரு க்கடியில் இருந்த போது*

*உரையாற்றினர். இதன் பின் பெருமளவு மக்கள், போராளிகளின் மலர் வணக்கத்துடன் நினைவுக் கூட்டம் நிறைவு பெற இந்த மாவீரர்களின் திரு வுருவப் படங்கள் பாண்ட் வாத்திய இசை அணிவகுப்புடன் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு இம் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் மாவீரன் கப்டன் கஜனது நினைவுக் கல்லை தளபதி சொர்ணம் அவர்களும், மாவீரர் லெப் கேணல் நாதனது நினைவுக் கல்லினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்களும், மாவீரர் மேஜர் சுரேந்தி அவர்களின் நினைவுக்கல்லினை அவர்களது சகோதரரும் ஏற்று மலர் வணக்கம் செலுத்தினர். இதையடுத்து பெருங்கிரளான மக்களும் போராளிகளும்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத்தீவின் பூர்வீகக் குடிகள் யார்?

மக்களுமொன்று என்று சந்திரிகா அனுராதபுரத்தில் நடந்த ஒரு வைபவத்தில் பேசி இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சனாதிபதி சந்திரிகா தமிழர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லர்

*முந்தி வந்த செவியைப் பிந்திவந்த கொம்பு மறைக்கிறது என்பது பழமொழி. இலங்கைத் தீவின் பூர்வீக குடிமக்கள் யார்? தமிழரா அல்லது சிங்களவரா? என்ற கேள்வி இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தீவிரமாக அலசப்பட்டு வருகிறது.*

இலங்கைத்தீவின் வரலாறு கி.மு. 483இல் இன்றைய கலிங்கம் அல்லது வங்காளத்திலிருந்து வந்து குடியேறிய விஜயனும் அவனது எழுனூறு தோழர்களோடு ஆரம்பிக்கிறது என்றும், இலங்கைத்தீவு அவன் பரம்பரையினரான சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு என்பதும் சிங்கள—பௌத்த தீவிரவாதிகளது திரிபுவாதமாக இருந்துவருகிறது.

அதுமட்டும் அல்லாது தமிழர்கள் வந்தேறு குடிகள், காலத்துக்கு காலம் இலங்கை மீது படையெடுத்து வந்த பாண்டிய சோழ மன்னர்களால் கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்கள், அவர்கள் சிங்களப் பெரும்பான்மை மக்களது தயவில் வாழுகின்றவர்கள் என்பதும் இந்த சிங்கள—பௌத்த இனவாதிகளது வாதமாகும்.

இந்த வாதத்துக்குத் துணையாக மகாவம்சம், சூழவம்சம் போன்ற பௌத்த இதிகாசங்கள், சிங்கள—பௌத்த தேசியத்தின் முன்னோடியெனக் கொண்டாடப்படும் அநாகரிக தர்மபால போன்ற சிங்கள தேசியவாதிகளது எழுத்துக்கள் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

'போர் என்பது வேறுவழிகளில் முன்னெடுக்கப்படும் அரசியல்' என்று சொல்வார்கள். இன்றைய தமிழர்—சிங்களவருக்கு இடையிலான ஈழப் போரை இலங்கைத் தீவு யாருக்குச் சொந்தம் என்ற அரசியல் கேள்விக்கு வேறுவழிகளில் பதில் காண முனையும் முயற்சி என்று வர்ணிப்பதில் தவறில்லை என்றே சொல்லலாம்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இலங்கைத்தீவின் மக்கள், எண்ணிக்கையில் குறைந்தவர்களாவிருக்கும் தமிழர்களுக்கும் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கும் சிங்களவர்களுக்கும் நாட்டில் ஒத்த உரிமை, சொந்தம் இருக்கிறது என்று ஒத்துக்கொண்டால் இனப் பிரச்சினை இருக்காது. வடக்கும்—கிழக்கும் தமிழ் மக்களது தாயக பூமி, தெற்கும் மேற்கும் மத்தியும் சிங்கள மக்களது தாயக பூமி என்ற யதார்த்தம் ஒப்புக் கொள்ளப்பட்டால் ஒரு தீவில் இரண்டு நாடுகள் இரண்டு மக்கள் சமாதானமாக வாழ்ந்திருக்கலாம். ஆனால், இந்த யதார்த்தத்தை சிங்கள—பௌத்த இனவாதிகள் ஒத்துக்கொள்ளத் தயாராய் இல்லை. தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதையோ அவர்களுக்கும் சிங்களவர் போன்றே ஆட்சி உரிமையில் பங்கு இருக்கிறது என்பதையோ இந்த சிங்கள—பௌத்த தீவிரவாதிகள் ஒத்துக்கொள்ளப் பிடிவாதமாக மறுக்கிறார்கள்.

இந்த சிங்கள பௌத்த தீவிரவாதிகளில் ஒருவரான சனாதிபதி சந்திரிகா, தமிழர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்த (சிறிலங்கா) நாட்டைச் சேராதவர்கள் எப்படி தனிநாடு கோர முடியும் என தென்னாபிரிக்க நாட்டுத் தொலைக்காட்சிக்குக் கொடுத்த செவ்வியில் கூறி உள்ளார். இதில் அதிசயம் எதுவும் இல்லை. அநகாரிக தர்மபால, எஸ். டபிள்யூ. ஆர். டி.


சிங்கள பௌத்த தீவிரவாதிகளில் ஒருவரான சனாதிபதி சந்திரிகா, தமிழர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்த (சிறிலங்கா) நாட்டைச் சேராதவர்கள் எப்படி தனிநாடு கோர முடியும் என தென்னாபிரிக்க நாட்டுத் தொலைக்காட்சிக்குக் கொடுத்த செவ்வியில் கூறி உள்ளார்.

**கொஞ்சக் காலத்துக்கு முன் சிறிலங்கா ஒரு பௌத்த நாடென்றும் நாடுமொன்று மக்களுமொன்று என்று சந்திரிகா அனுராதபுரத்தில் நடந்த ஒரு வைபவத்தில் பேசி இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.**

என்று கூறியதை இட்டு கொழும்பில் அரசியல் வியாபாரம் செய்து பிழைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஏனைய தமிழ்க் குழுக்கள் எதுவும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. நக்கினார் நாவிழந்தார் என்பதுபோல இந்தத் தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் வாயைத் திறக்காமல் மௌனிகளாக இருந்துவிட்டார்கள்.

அகில இலங்கை காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் ஒருவரே ஜனாதிபதியின் கூற்றை மறுத்து அறிக்கை விட்டுள்ளார்.

ஒரு நாடும் அந்த நாட்டு மக்களும் பொருளாதாரத் துறையில், நவீன தொழில்நுட்பத் துறையில் முன்னேற வேண்டுமென்றால் இன, மத, மொழி வேறுபாடுகளை மறந்து எல்லா மக்களும் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒத்த உரிமை, ஒத்த நிறை, ஒத்த விலை உடையவர்களாக வாழ்வதற்குரிய அரசியல் ஆட்சிமுறை இருக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் சமாதானம், சுபீட்சம், அரசியல் கட்டுப்பாடு நிலவும். இதற்கு கனடா நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இதற்கு முற்றிலும் மாறாக சிறிலங்கா விளங்குகிறது. நல்லாட்சிக்குப் பதில் காட்டாச்சியே அங்கு நடைபெறுகிறது. செங்கோல் ...




நடக்கிறார்கள். ஆனால், இந்தக் கதையைக் கூறும் மகாவம்சமே விஜயனது வருகைக்கு முன்னர் இலங்கைத்தீவில் நாகர், இயக்கர், அரக்கர், புலிந்தர் இருந்தனர் என்றும் அவர்கள் கொற்றமும் கொடியோடும் அரசாட்சி செய்தார்கள் என்றும் கூறுகிறது.

மகாவம்சம் 6ஆம் நூற்றாண்டில் மகாநாம என்ற புத்ததேரர் ஒருவரால் பாளி மொழியில் எழுதப்பட்ட இதிகாசம் ஆகும். மகாவம்சம் என்றால் "பெருங்குடியினர்" என்பது பொருளாகும். வம்சம் தமிழ்ச்சொல்லாகும். இது இலங்கை பற்றிய கர்ணபரம்பரை கதையோடு ஆரம்பித்து மகாசேனன் ஆட்சியோடு (கி.பி. 334—362) முடிவுறுகிறது. இதன் இரண்டாவது பாகம் 'சூழவம்சம்' எனப் பெயர் பெறும். இதன் முதல் பிரிவு 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தர்மகீர்த்தி என்ற புத்த தேரரால் எழுதப்பட்டது என நம்பப்படுகிறது. மகாவம்சத்தின் கதை நாயகன் துட்டகைமுனு என்றால் (கி.மு 101—77) சூழவம்சத்தின் கதை நாயகன் தாதுசேனன் ஆவர்ன். கி.பி 1137—1186)

சிங்களவர் நடாத்திய புனித யுத்தம் எனக் காட்ட மகாவம்சம் முயன்றுள்ளது. ஆனால், எல்லாளன் துட்டகைமுனு யுத்தத்தின்போது எல்லாளன் தரப்பில் மட்டுமல்ல துட்டகைமுனுவின் படையிலும் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள். கைமுனுவின் படைத்தளபதிகளில் ஒருவனாக நந்தமித்தன் இருந்திருக்கிறான். இவனது நெருங்கிய உறவினன் எல்லாளன் படையில் சேனாதிபதியாக இருந்திருக்கிறான். அதுமட்டுமல்லாது உருகுணையிலிருந்து அனுராதபுரத்திற்கு படை எடுத்துவந்த கைமுனு இடையில் சிற்றரசர்களாக இருந்த 32 தமிழர்களை போரில் வென்றான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இது கி.மு 2ஆம் நூற்றாண்டில முழு இலங்கையிலும் தமிழர்கள் பரவி வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

இலங்கைத் தீவுக்கு புத்த பெருமான் மும்முறை வந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. முதல் முறை வந்தபோது ஆட்சி உரிமையைப் பற்றி தங்களுக்குள் மோதிக்கொண்ட இரண்டு இயக்க அரசர்களிடையே ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோடி நாகர்களுக்கு புத்த ர்மத்தைப் போதித்தார் என்று காவம்சமும் புத்த மத காப்பிய மான மணிமேகலையும் குறிப்பிடு றது.

ன்றாவது முறை புத்தர் வந்தபோது ன்று களனி என்று அழைக்கப்படும் ல்யாணியில் அரச உரிமைக்காக ண்டை பிடித்துக்கொண்டிருந்த ரண்டு நாகவரசர்களுக்கிடையில் லவிய பிணக்கைப் போக்கினார் ன்று மகாவம்சம் கூறுகின்றது.

காவம்சம் இலங்கையின் ஆதிக் டிகள் என சிங்களவர், தரச்சர், ம்புக்காணர் (முயல் அல்லது ஆடு) ாலி போயகர் (காகம்) மோரியர் மயில்), புலிந்தர் இவர்களைக் றிப்பிடுகிறது. மகாவம்சத்தின் தைப்படி வேடர் விஜயனுக்கும் வேனிக்கும் பிறந்த பிள்ளைகள் னச் சொல்லப்பட்டுள்ளது. சிங்கள ர் காலத்தால் வேடர்களுக்கு ந்தியவர்கள் எனக் காட்டவே காவம்ச ஆசிரியர் இந்த புனைந் ரையைப் புகுத்தி உள்ளார். வேடர்கள் பெருமளவில் இலங்கையில் டியேறிய ஆரியர்களோடு நாளடை வில் மண உறவு மூலம் கலந்தார்கள் என 'இலங்கையின் பழைய வரலாறு' என்ற நூலில் ஜி.ஸி. மென்டிஸ் குறிப்பிடுகிறார். கண்டிச் சிங்கள வர்கள் தென்புலத்தோர்க்கு படையல் படைக்கும் வழக்கம் வேடர்களது கலப்பினால் ஏற்பட்டதென கலாநிதி செலிக்மென் அபிப்பிராயப்படுகிறார்.

இந்த நாகர்கள், இயக்கர்கள், வேடர்கள் ஆதி திராவிட இன மக்கள் என்பதும் அவர்கள் சிறந்த நாகரிகம் படை த்தவர்கள் என்பதும் கவனிக்க த்தக்கது. (சங்ககாலப் புலவர்களில் சிலர் வேட இனத்தைச் சேர்ந்தவர்க ளாக இருந்திருக்கின்றனர்).


இப்போது குடாநாடாக விளங்கும் யாழ்ப்பாணம் முன்னொரு காலத்தில் அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு தீவுகளாக இருந்தது. மேற்கே நாகதீபம், மணிநாகதீபம், மணிபுரம், மணிபல்லவம் என்னும் பெயர்களால் வழங்கப்பட்ட பெருந் தீவும், கிழக்கே எருமை முல்லைத்தீவு எனப் பெயர் பெற்ற சிறுதீவும் இருந்தன.

இவை காலத்துக்குக் காலம் இடம் பெற்ற கடற்கோள்களினால் பெரும் பகுதி அழிந்துபோயின. இன்று யாழ்ப்பாணக்குடாநாட்டைச் சுற்றி இருக்கம் புங்குடுதீவு, அனலைதீவு, மண்டைதீவு போன்ற தீவுகள் அப்பெருந்தீவகத்தின் மிஞ்சிய பகுதி களே ஆகும். கி.மு வடஇந்தியாவை ஆண்ட பாண்டவர் களில் ஒருவரான அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டபோது இன்றைய கீரி மலையான நகுலமலை யைக் கொண்ட மணிபுரத்திற்கு வந்தானென்றும் அந்த நாட்டு நாகவரசனின் மகள் சித்திராங்க தையைக் கண்டு காதல்கொண்டு அவளைத் திருமணம் செய்தா னென்றும் பாரதக் கதையில் சொல்லப்படுகிறது. அர்ச்சுனன் சித்திராங்கதை இருவருக்கும் பிறந்த சித்திரவாகன் என்பான் தனது தந்தையாகிய அர்ச்சுனனை போரில் வென்றான் என்றும் அவனது கொடி சிங்கக் கொடி என்பதும் மகா பாரதத்தால் அறியப்படும். இந்தச் சிங்கக் கொடியே விஜயனின் சந்ததியோடு நாகர்கள் மண உறவு வைத்து இரண்டறக் கலந்தபோது சிங்களவரின் கொடியாக பின்

நாகக் கன்னிகை ஒருத்தியையே விஜயன் மணம் முடித்திருக்க வேண்டும் என்று முதலியார் சி. இராசநாயகம் அவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் கூறியுள்ளார். நாகர், இயக்கர், அரக்கர், வேடர் இவர்கள் எல்லோரும் முன் குறிப்பிட்டதுபோல இனத்தால் திரா விடர்களே. சமயத்தால் சைவர்களே. இதேபோல் கலிங்கத்திலிருந்து இல ங்கை வந்த விஜயனும் அவனோடு வந்த கலிங்கர்களும் சமயத்தால் சிவவழிபாட்டினரே.

நாகர், இயக்கரை மனிதரல்லாதோர் அல்லது அரை மனிதர்களாக மகாவம்சம் சித்தரிப்பதன் நோக்கம் சிங்களவரே ஆதிக்குடி என்ற மாயையை தோற்றுவிப்பதற்கே ஆகும்.

விஜயன் இலங்கையில் தரை இறங்கியபோது இன்றுள்ள ஐந்து ஈசுவரங்களான திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் மற்றும் முன்னேஸ் வரம் என்ற சிவாலயங்கள் அப்போதும் இருந்திருக்கின்றன. இவற் றில் திருக்கேதீஸ்வரமும் கோணேஸ் வரமும் 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார் இருவராலும் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்களாகும். மேற் குறிப் பிட்ட ஐந்து ஈஸ்வரங்களைவிட




சிவபக்தனாக விளங்கியவன். திருஞானசம்பந்தர் 'இராவணன் மேலது நீறு' என்று திருநீற்றுப் பதிகத்தில் இவனைப் போற்றிப் பாடியுள்ளார். 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்க வாசகர் இராவணனின் பட்டத்தரசியை 'ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை சீரிய வாயால் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்' என குயில் பத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார். 'பெருந் துறை மேயபிரான்' என்று தூய தமிழில் 'நாளும் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தர்' குறிப்பிட்டது மாதோட் டத்து திருக்கேதீஸ்வரத்தில் எழுந்தருளி இருக்கும் சிவனையே. மா என்றால் பெரியது என்று பொருள். தோட்டம் என்றால் துறை என்று பொருள். இந்த மாதோட்டமே பன்னெடுங்காலமாக இலங்கையில் முக்கிய துறைமுகமாக விளங்கியது. வங்காளக் குடாக் கடலுக்கூடாக கீழைத்தேசங்களுக்கு பயணம் செய்யும் மரக்கலங்களும் சீனத் தேசத்திலிருந்து வரும் மரக்கலங்களும் மாதோட்டம் வழி யாகவே போய் வந்தன.

## நக்கீரன்

திருக்கோணேஸ்வர மலையில் காணப்படும் ஆழமான பெரிய வெட்டு

**விஜயன் இலங்கையில் தரை இறங்கியபோது இன்றுள்ள ஐந்து ஈசுவரங்களான திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் மற்றும் முன்னேஸ்வரம் என்ற சிவாலயங்கள் அப்போதும் இருந்திருக்கின்றன. இவற்றில் திருக்கேதீஸ்வரமும் கோணேஸ்வரமும் 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் இருவராலும் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்களாகும்.**

மேற்குக் கரையோரத்தில் இப்போது மாதோட்டம் (மன்னார்) என்று அழைக்கப்படும் மாந்தை என்னும் நகரை தலைநகராகக் கொண்டு நாகர் வகுப்பைச் சேர்ந்த ஓவியர் குலத்தவரும், தேவசிற்பியுமாகிய விசுவகர்மாவின் வம்சத்தவராகிய கம்மியர் ஆட்சி செய்து வந்தார்கள். இலங்கை வேந்தன் இராவணன் தேவி மண்டோதரியும் அவன் சிறிய தந்தையுமாகிய குபெரன், தேவி சித்திரரேகையும் இம்மாந்த நகரை ஆண்ட தேவகம்மிய அரசுகுலத்த வம்சத்துப் பெண்களே. முருகக் கடவுளால் ஆட்கொள்ளப்பட்ட அசுரகோனாகிய சூரபதுமனுடைய தேவி பதுமகோளையும் மாந்தை நகரத்தவளே.

மாந்தையை ஆண்ட அரசர் காந்தக் கோட்டை என்ற பல தேசத்தாரால் போற்றப்பட்டதும் தூங்கையில் என்று புறநானூற்றில் சிறப்பிக்கப்பட்டதுமான இரும்புக்கோட்டையை உடையவர் களாகவும் வாணிபச் செழிப்புற்ற வர்களாகவும் வீரம் கொடை இசை சிற்பம் ஓவியம் போன்றவற்றில் சிறப்புற்றவர்களாகவும் விளங்கி னார்கள்.

மாந்தையில் வாழ்ந்த ஓவியர் குலத்தாரின் சித்திரத் தொழிலின் சிறப்புக் காரணமாகவே ஓவியம் என்ற சொல் தமிழில் வழங்குகிறது.

எபிரேபிய மொழியில் யானையின் தந்தத்துக்கும், குரங்குக்கும் அகிலுக்கும் மயிலுக்கும் உரிய சொற்கள் இபம், கபி, அகில் தோகை என்னும் தமிழ் சொற்களே. இதேபோல் கிரேக்க மொழியில் அரசி, இஞ்சிவேர் கறுவா எனனும் பண்டங்களைக் குறிக்கும் சொற்கள் தூய தமிழ்ச்சொற்களே.

ஓவியரல்லாத மறு நாக வம்சத்து அரசர்கள் கதிரமலை, இன்று முல்லைத்தீவு என்று அழைக்கப்படும் எருமை முல்லைத்தீவிலும் குதிரை மலையிலும் இருந்து அரசாண்டு வந்தார்கள். அல்லியரசாணியும் எழினியும் பிட்டங்கொற்றானும் குமணனும் குதிரமலையிலும் ஆந்தை ஆதனழிசி, நல்லியக்கோடன் வில்லியாதன் என்பார் மாந்தையிலும் எருமையூரன், எருமை முல்லை த்தீவிலும் அரசாண்டதாக புற நானூறு—அகநானூற்றுப் பாடல்களால் அறிய முடிகிறது.

இந்தக் கதிரமலையே போர்த்துக்கேய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கைத்தீவின் .....

யாழ்ப்பாண வைபவமாலை விஜயன் கதிரமலையில் வந்திறங்கியதாகவே சொல்கிறது. 'கதிரமலையில் வசித்த நாகவரசனுடன் நட்புக்கொண்டு, இலங்கையில் பாழடைந்து கிடந்த கோவில்களைப் புதுப்பித்தும் புதிய கோயில்களை கட்டுவித்தும் வந்தான்.' என்னும் கர்ண பரம்பரைக் கதையைத்தான் மயில்வாகனப் புலவர் தாம் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிட்டிருக்க வேண்டும். விஜயனுக்குப் பின் சில தலை முறைக்குள் இலங்கை அரசர்கள் கலிங்க குலம் நீங்க நாகர் குலத்தவர் ஆனார்கள். அதாவது தமிழர்க ளானார்கள்.

அசோக சக்கரவர்த்தி (கி.மு 274–237) இலங்கையில் புத்தமதத்தைப் பரப்ப அனுப்பிய அவனது மகள் சங்கமித்தையும் மகன் மகிந்தனும் வந்திறங்கிய இடம் இன்றைய கீரிமலையாகும். அப்போது அனுராத புரத்தை ஆண்டு கொண்டிருந்த மன்னனான தேவநம்பிய தீசன் (கி.மு 247–207) நாகவம்சத்து அரசனாவான். அவன் சிங்கள அரசனல்லன். அவனது பெயர் சிங்களப் பெயரன்று. தேவநம்பிய தீசன் என்றால் தேவனை நம்பிய என்பது பொருளாகும். தீசன், நாகன் நாகவம்சப் பெயர்களாகும். அவனது தந்தையின் பெயர் மூத்தசிவன் சுத்தமான தமிழ்ப் பெயர். தேவநம்பிய தீசனின் பின் அரியணை ஏறிய அவனது சகோதரர்களது பெயர்கள் முறையே உத்தியன், மகாசிவன் என்பதாகும். இவர்களுக்குப் பின் சோரநாகன், இளநாகன், அபயநாகன், சிறீநாகன், குட்டநாகன், மகாநாகன் என பல நாகர்குல அரசர்கள் இலங்கையை ஆண்டி ருக்கின்றார்கள்.

நாகவணக்கம் தமிழர்கள் மத்தியில் (சிங்களவர்களும் நாகர்களின் பரம்பரையாதலால் அவர்கள் மத்தி யிலும் நாகவணக்கம் காணப்படுகிறது) பரவலாக இருந்திருக்கிறது. நாகர் கோவில், நாகதம்பிரான் கோவில்கள் நாகவழிபாட்டோடு தொடர்புடைய சைவ ஆலயங்களாகும். தமிழர்களது பெயர்கள் பல நாகத்தோடு தொடர்பு டையதாக இருப்பது அவதானிக்க த்தக்கது. நாகநாதன், நாகராசா, நாகம்மா, நாகேசுவரி போன்ற பெயர்கள் இன்றும் வழக்கத்தில் இருக்கிறது.

இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க வானயியலாளர் தொலமி நாகர்களை குறிப்பிடும்போது பின் வருமாறு வர்ணிக்கிறார்:

'ஆண்களதும் பெண்களதும் காதுகள் பெரிதாக இருக்கும். இவர்கள் (நாகர்கள்) இரண்டு காதுகளிலும் பெரிய துளை போட்டு முத்துக்கள் பதித்த தோடுகளை அணிவார்கள்.'

பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் காதுக்குத் தோடு போடும் வழக்கம் மிக அண்மைக்காலமாக தமிழர்கள் மத்தியில் இருந்திருக்கிறது.

(நானும் ஆங்கிலப்பள்ளிக்குப் போன பின்னரும் காதில் தோடு போட்டிருந்தேன்.)

இதே தொலமி தான் வரைந்த உலகப்படத்தில் இலங்கையையும் வரைந்துள்ளார். மேற்கே சிலாபம் தொடக்கம் கிழக்கே திருகோண மலைக்குக் கீழேயுள்ள பிரதேசத்தை அவர் 'நாகதீப' என்றே குறிப்பிடுகிறார். வடமேற்குப் பகுதியை தமிழ் சொல்லான தாமிரபரணி அரபு


ஏனைய ஊர்ப்பெயர்கள் தமிழில் அல்லது அதன் நேரிடையான கிரேக்க மொழிபெயர்ப்பில் காணப்படுகிறது.

சங்க இலங்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையில் நிலவிய வாணிக உறவை தெளிவாக்குகிறது. 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி வீட்டையும் வடமலை பிறந்த ஆரமும் அகிலும்... கங்கைவாரியும் காவிரிப்பயனும் ஈழத்துணவும் காழகத்தாக்கமும் அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி வழந்தலை மயங்கிய நனந்தலை மறுகி' (பட்டினப்பாலை 185–193)

மேலும் தமிழகம் ஈழம் இரண்டிற்கும் இடையிலான உறவை உறுதி செய்வதுபோல சங்கப் புலவர்கள் பட்டியலில் ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவர் பெயரும் இடம்பெறுவது

இலங்கை எப்போதும் மூன்று அல்லது அதற்கு மேலான பகுதிகளாக (ராஜரட்டை, மாயரட்டை, உருகுண ரட்டை, யாழ்ப்பாணம்) பிரிக்கப்பட்டு அரசர்களால் ஆண்டு வந்தபடியால் (ஏக இலங்கை) என்ற உணர்வு பிறக்க வழி இல்லாது போயிற்று. துட்டகைமுனு, முதலாம் பராக்கிரம பாகு முதலாம் விஜயபாகு இவர்கள் மட்டுமே முழு இலங்கையையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டுவந்ததாக நம்பப்படுகிறது.

விஜயபாகு கி.பி 1038இல் ராஜா திராஜன் என்ற சோழ மன்னனால் கொல்லப்பட்ட சிங்கை நகர் அரசனான மானாபரனனின் மகளான திலகசுந்தரியை திருமணம் செய்து தனது பட்டத்தரசியாக்கினான். மானாபரனின் மகனே முதலாம் பராக்கிரம பாகு ஆவான். அவனது தாயார் பெயர் இரத்தின வல்லி.




குறிப்பிடத்தக்கது.

கி.மு 483இல் இருந்து கி.பி 896வரை அதாவது விஜயன் முதல் காசியப்பன் வரை சுமார் 1400 ஆண்டுகள் இலங்கையை ஆண்ட மன்னர்களில் யாருமே தனிச்சிங்களவர் இல்லை. காரணம் சிங்கள இனமும் சிங்கள மொழியும் கி.பி. 7 அல்லது 8ஆம் நூற்றாண்டளவிலேயே உருவாக்கப் பட்டு அடையாளம் காணப்படுகிறது. இதனாலேயே இலங்கைத் தீவுக்கு சிங்களத்தில் பெயர் யாதும் இல்லை. சிறிலங்கா என்பது கிரந்த

அவன் சிங்கபுரத்தில் பிறந்ததாக இராட்சத குழத்தருகே அவனால் வெட்டப்பட்ட சாசனம் கூறும். யாழ்ப்பாண சிங்கை ஆரிய சர்க்கரவர்த்திகள் இராமேஸ்வரத்தை ஆண்ட பிராமண குலத்தரசருடன்

## நக்கீரன்

சம்பந்தம் செய்து ஆரியவரசப் பெயர் புனைந்து உபவீரமுந்தரிந்திருந்தார்கள். அதுபோலவே பராக்கிரமபாகுவிற்கும்

இன்றைய கண்டிய பிரபுத்துவ குடும்பங்களான ரத்வத்தை, அலு விகாரை, எகலபொல, மொன்றாவெல, பிலிமத்தலாவ, கெப்பட்டிப்பொல அசல் தமிழ்ப் பெயர்களின் திரிபே. அலுவிகாரை என்பது அளவுகாரன் அதாவது நிலத்தை அளப்பவன். ஏகலபொல என்பது எல்லைப்பாதுகாவலனைக் குறிக்கும். ரத்வத்தை என்பது ரதவாதயன் என்ற சொல்லை அடியாகக் கொண்டது. அதாவது அரசனின் கட்டளைப்படி கசையடித் தண்டனையை நிறைவேற்றுபவன். மொன்றாவல தமிழ் சொற்களான மண்வேலை என்பதன் திரிபாகும். மண்வேலைக்குப் பொறுப்பாக இருப்பவன். புலவர் சக தலைவன் சமன் பிலிமத்தலாவ– தலைமைப் புலவர். இதேபோல் கெப்பெட்டிப்பொல கல் சக வேலை சக பாலன்– அதாவது கல்லாலான கட்டிட வேலையை மேற்பார்வை (பாலனம்) செய்பவன். பண்டாரநாயக்க என்ற பெயர் அரண்மனை பொக்கிசத்துக்கு தலைவனாக இருப்பவனைக் குறிக்கும். சிங்களவரின் பரம்பரையை பின்னோக்கிப் பார்த்தால் அது ஒரு தமிழன் அல்லது தமிழச்சியின் ஆரம்பத்தில் போய் முடிவதைப் பார்க்கலாம்.

வழங்கப்பட்டது. இதன் காரணமாகவே இலங்கைக்கு ஈழம் என்ற பெயர் உண்டாயிற்று. (ஈழம்) (சீழம்) என மருவிப் பின் 'சிஹழம்' சிங்களம் என மாறியது. சிஹ என்ற பாளி மொழிச் சொல்லின் பொருள் சிங்கம் என்பதாகும். விஜயன் சிங்கத்தின் வழித்தோன்றல் என்பதால் அவன் சந்ததியினர் சிங்களவர் என அழைக்கப்பட்டார்கள் என மகாவம்ச ஆசிரியர் குறிப்பிடுவது அவரது கற்பனையே.

சிங்கள மொழியின் தாய்மொழியான ஈழ மொழி பேசி வந்த படியாற்றான் யாழ்ப்பாணத்திலுள்ள சில ஊர்களின் பெயர்களும் காணித்தோம்புகளின் பெயர்களும் சிங்களப் பெயர்களாக தோற்றமளிக்கின்றன. அப்பெயர்கள் விஜயன் இலங்கைக்கு காலடி எடுத்து வைக்குமுன்னரே வழக்கில் இருந்தன என்பதில் எந்த ஐயமும் இல்லை. இதேசமயம் குரநாக்கல் கேகாலை போன்ற சிங்கள ஊர்களின் தோம்புகள் தமிழில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய சிங்கள மொழி பாளி, சமஸ்கிருதம், தமிழ், எலு மொழிகளின் கலப்பினால் உருவாகிய ஒரு கதம்ப மொழியாகும். சிங்கள மொழியில் காணப்படும் சொற்களில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்ச் சொற்களை வேராகக் கொண்ட வையே. சிங்கள மொழியின் எழுத்துவடிவம் பெரும்பாலும் தெலுங்கு கன்னட மொழிகளை ஒத்து இருக்கிறது. காரணம் சிங்கள மொழிக்கு எழுத்து வடிவமும் அமைத்தவர்கள் தென்னாட்டிலிருந்த

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கொசோவோவும் தமிழீழமும்.....

பூபெக் பிரிந்து செல்வது தொடர்பாக னேடிய மேல்நீதிமன்று வெளியிட்ட நத்தின்படி, சுயநிர்ணய உரிமையின் றவடிவாம்சம் காலனித்துவ ஆட்சி ற்ற நிலையிலும் பொருந்தும் என தரிவிக்கப்பட்டுள்ளது. சுயநிர்ணய ரிமைக் கோட்பாட்டின் முதன்மை ம்சமான 'மக்கள்' எனும் பதம் பற்றி திமன்றம் தெரிவிக்கையில்,

இயங்கிவரும் ஒரு அரசின் மொத்த னத் தொகையில் ஒரு பாகத்தை க்கள்' என குறிப்பிடலாம் என்பது

---

*முன்னர் பிரித்தானிய பிரதமர் ரோனி பிளேயர் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது 'வரலாற்றின் கைகள் எமது தோள்களிலேயே படிந்துள்ளன.' மனச்சாட்சி, நீதி, நியாயம் போன்ற சக்திகளால் உந்தப்பட்டு மனித அவலங்களை எதிர்நோக்கும் ஏனைய நாட்டுப் பிரச்சனைகளில் எவ்வாறு அனைத்துலக சமூகம் அக்கறை காட்டியதோ, அவ்வாறான அக்கறையை தமிழர் பிரச்சனையிலும் காட்ட வேண்டும் என்பதே இப்போதைய சூழலில் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.*

---

இங்கு தெளிவாகின்றது. சுயநிர்ணய ரிமையானது ஒரு மனித உரிமையாக வளர்ச்சி பெற்றுள்ளதோடு, இப் பதமானது, தேசம், அரசு போன்ற விடயங்களுடன் தொடர்புபட்ட ஆவணங்களில் காணப்படுகின்றது. இதன் மூலம் நாம் புரிந்து கொள்ளக்கூடியது யாதெனில், 'மக்கள்' எனும் பதம் ஒரு அரசின் முழு சனத் தொகையையும் குறியீடு செய்வதில்லை. மேற்கண்ட பதத்தை ஓர் இயங்குநிலை அரசின் முழு சனத் தொகைக்கு வரையறை செய்வதானது வழங்கப்படும் சுயநிர்ணய உரிமையை முழுமையற்றதாக்குகின்றது.'

மேல்நீதிமன்றத்தின் கருத்து வழங்கப்படுவதற்கு முன் நடைபெற்ற வழக்கில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக திரு. மாணிக்கவாசகம் சுரேஸ் அவர்களால் கடைப் பிடிக்கப்பட்ட நிலைப்பாடானது ஆலோசனைத் தீர்விற்கு ஏதுவாகவே அமைந்தது.

சுயநிர்ணய உரிமையின் புறவடி வாம்சத்தைக் கொண்ட கொசோவ மக்களின் தன்னாட்சி கோரிக்கை தொடர்பான மேற்குலகின் கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது. அல்பேனியர்களின் புறவடிவாம்ச சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை முற்றுமுழுதாக நிராகரிக்கப்படவில்லை. மாறாக கடந்த மூன்று வருடங்களாக முடிவுகள் ஏதும் எடுக்கப்படாத நிலையிலேயே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் யாதெனில் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டாலும் ஒரு தரப்பு போரில் ஈடுபடுவதை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லையென்பதே. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் புறவடிவில் அமுல்படுத்தப்படக் கூடிய தமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு மட்டுமே தமிழர்கள் கோரினர். பேச்சுவார்த்தைகள் வெற்றியளிப்பதற்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான உரித்து நிலை தொடர்பான தேசிய கருத்துக் கணிப்பு அல்லது ஆகக்குறைந்தது சிங்கள மக்களிடையே கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனும் சிங்கள அரசியல் சக்திகளின் வாதமானது குறுகிய அரசியல் இலாபங்களை உள்ளகத்தே கொண்டது. இஸ்ரேலின் இருப்புநிலைக்கு 1988 இல் பலஸ்தீனிய விடுதலை இயக்கம் வழங்கிய அங்கீகாரமானது இஸ்ரேலுக்கும் பலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு வழி சமைத்தது.

---

*ஒரு பிராந்திய மக்களின் பாதுகாப்பு அம் மக்களை பிரதிபலிக்கும் இராணுவத்தினராலேயே நிர்ணயிக்கப்படுமேயொழிய, அந்நிய இராணுவம் ஒன்றினால் நிர்ணயிக்கப்படமாட்டாது. அவ்வகையில் பார்க்கும்போது தமிழர் தாயகத்தின் பாதுகாப்பை விடுதலைப் புலிகளாலேயே நிலைநாட்ட முடியும். தமிழ் மக்களை படுகொலை செய்த குற்றவாழியான சிங்கள இராணுவத்தால் அல்ல.*

---

இவ்வாறான அரசியல் மனோதிடம் இலங்கையிலுள்ள அரச சார்பற்ற அமைப்புகளிடையே இருப்பது மகிழ்வை அளிக்கின்றபோதும், இவ் அணுகுமுறை பெரும்பான்மை பலம் மிகுந்த சிங்களக் கட்சிகளிடையே காணப்படுவதில்லை என்பது உண்மை. இம் முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் சிங்கள அரசியல் தலைமைகளிடம் இருந்து எதிர்பார்க்கக் கூடியது ஒன்றே ஒன்றுதான். அதாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது சிங்கள மக்களின் அபிலாசைகளை ஒருபோதும் பாதிக்கப் போவதில்லை. மாறாக இலங்கைத் தீவில் சமாதானத்தையும், திடமான சூழ்நிலையையுமே உரு வகித்துக் கொடுக்கும் என்ற உண்மையை தேசிய அளவிலான கலந்துரையாடல் ஒன்றின் மூலம் சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டியதே அதாகும்.

இவ் விடயத்தில் அனைத்துலக சமூகத்தின் பங்கு யாதெனில், அது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்வதாகும். இதன் மூலம் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைக்கு சிங்கள அரசியல் சக்திகள் ஆதரவு திரட்ட முடியும். இந் நிலையானது சிறீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான சமபலநிலையின்மையை குறைப்பதோடு பேச்சுவார்த்தை மூலமான வெற்றிகரமான தீர்வுக்கு வழிகோலும்.

முடிவுரை:

முன்னர் பிரித்தானிய பிரதமர் ரோனி பிளேயர் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கு குறிப்பிட விரும்பு கின்றேன். அதாவது 'வரலாற்றின் கைகள் எமது தோள்களிலேயே படிந்துள்ளன.' மனச்சாட்சி, நீதி, நியாயம் போன்ற சக்திகளால் உந்தப்பட்டு மனித அவலங்களை எதிர்நோக்கும் ஏனைய நாட்டுப் பிரச்சனைகளில் எவ்வாறு அனைத்துலக சமூகம் அக்கறை காட்டியதோ, அவ்வாறான அக்கறையை தமிழர் பிரச்சனையிலும் காட்ட வேண்டும் என்பதே இப் போதைய சூழலில் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும். ❃

---

## இலங்கைத்தீவின் .....

அனுராதபுரியை தலைநகராக்கினான்.

அனுராதபுரத்தரசர்கள் கதிரமலையை தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த யாழ்ப்பாண அரசர்களொடு நட்புரிமை கொண்டு வாழ்ந்ததோடு மண உறவும் வைத்துக்கொண்டார்கள். சில சிங்கள அரசர்கள் சைவ சமயிகளாகவும் இருந்திருக்கிறார்கள். அதுபோலவே தமிழ் மக்கள் சிலரும் பௌத்தர்களாக இருந்திருக்கிறார்கள். 1946ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தின்படி 2.6 விழுக்காடு இலங்கைத் தமிழர் தங்களை புத்த சமயத்தவர் எனத் தெரிவித்திருந்தார்கள்.

மேலே குறிப்பிட்டிருப்பதுபோல் தேவநம்பியதீசனின் தாயாரும் மூத்தசிவனின் பட்டத்தரசியும் நாகவம்சத்தவளே. அக்காரணம் பற்றியே 'நாகன்' 'திஸ்யன்' என்னும் பெயர்கள் மூத்தசிவனின் பிள்ளைகளுக்கு இடப் பட்டது. மகத நாட்டு அசோகனும் தேவநம்பிய தீசனும் சமகாலத்தவராவார். புத்த மதத்தை இலங்கையில் பரப்ப அசோகன் தனது மகள் சங்கமித்தை மகன் மகிந்தன் (அசோகனது வரலாற்றுப்படி அவனுக்கு மகன் இருந்ததிற்கு ஆதாரம் இல்லை) இருவரையும் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளையோடு அனுப்பி வைத்தான். அவர்களை ஏற்றி வந்த கப்பல் யாழ்ப்பாணத்து வடகரையில் இப்பொழுது சம்புத்துறை என அழைக்கப்படும் சம்பு கோளத்தில் தான் வந்து இறங்கின.

தேவநம்பிய தீசனைப் போன்றே கதிரமலையை ஆண்ட அரசர்களும் புத்த மதத்தைத் தழுவிய புத்த தமிழர்கள் நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டு காலமாக சமண—புத்த சமயத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். சங்க காலப் புலவர்கள் பலர் சமண — புத்த மதத்தவராவார். கோவலன் அநியாயமாகக் கொல்லப்பட்டபின் மாதவியும் அவளது மகள் மணிமேகலையும் கோவலன் தாய் தந்தையரும் (மாநாய்க்கன்) புத்த மதத்தைத் தழுவினார்கள் என மணிமேகலை கூறுகிறது. அதேசமயம் கண்ணகியின் பெற்றோர் (மாசாத்தான்) சமண மதத்தை தழுவினார்கள்.

தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலையும் குண்டலகேசியும் புத்தமத காப்பியங்களாகும். சிந்தாமணி சமணமதக் காப்பியம். சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சமண முனிவராவர். வளையாபதி அழிந்தொழிந்து போனதால் அதன் ஆசிரியர் பற்றிய குறிப்பு எதுவும் தெரியவில்லை.

அனுராதபுரத்தரசர்கள் வலிமை குன்றிய காலத்தில் சுயாதீனமாகவும் வலிமை மிக்க காலத்தில் திறை செலுத்தியும் அரசுபுரிந்து வந்தார்கள்.

அனுராதபுரம் கதிரமலையன்றி மேற்கே கல்யாணியிலும் (களனி), கிழக்கே கொட்டியாராத்திலும், தெற்கே திசமகாரமையிலும், மாத்தளைக்கு வடக்கே லேனதொறை என்னும் இடத்திலும் நாக இராசதானிகள் இருந்தன.

அனுராதபுரத்தில் விஜயனின் சந்ததி ஐந்து தலைமுறைக்குள் அற்றுப்போக கலிங்கரும் நாகரும் கலந்த மிசிரகுலத்தவரே அதன்பின் அரசாண்டு வந்தார்கள். பாண்டி

இனம் உருவாகியது. தெற்கே மாத்தறை தொடக்கம் வடக்கே சிலாபம் வரை வாழுகின்ற கரையோர மக்கள் எல்லோரும் தமிழ் நாட்டிலிருந்து குடிபெயரந்து நாளடைவில் சிங்களவர்களான தமிழர்களேயாவர். அண்மைக்காலத்தில் கூட நீர் கொழும்பு, சிலாபத்தில் தமிழ் நாட்டிலிருந்து குடிபெயர்ந்த பரவர் மதமாற்றம் காரணமாக தமிழை விடுத்து சிங்களத்தை கற்கை மொழியாகப் புகுத்தியதினால் சிங்களவர்களாக மாறியவர்களே. இதேபோல் வாணிக நிமித்தமாக - கொழும்புக்கு வந்து குடியேறிய தமிழ்நாட்டு செட்டிமார், நாளடைவில் கொழும்புச் செட்டிகளாக மாறி இன்று முழுச் சிங்களவர்களாக மாறிவிட்டார்கள்.

சிங்கள அரசர்கள் தங்களுக்குள் அரியாசனத்துக்கு மோதிக்கொண்ட போதெல்லாம் பாண்டிய, சோழ நாட்டு மன்னர்களின் உதவியையே நாடினார்கள். அங்கிருந்து பெரும் படைகளை திரட்டி ஆட்சியில் இருந்தவர்களைத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இவர்களால் கொண்டுவரப்பட்ட படையினர் இலங்கையில தங்கி நாளடைவில் சிங்களவர்களாகவும் பௌத்தர்களாகவும் மாறினார்கள்.

சாளுக்கிய மன்னனான ஆறாவது விக்கிரமாதித்தனுக்கு விஜயபாகுவால் அனுப்பப்பட்ட தூதுவர்களை சோழர்கள் அவமதித்தார்கள் என்பதற்காக சோழர் மீது படையெடுக்க விஜயபாகு முனைந்தபோது அவனது வேலைக்காரப்படை அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தது.

சிங்கள அரசர்கள் காலத்துக்கு காலம் பாண்டிய சோழ இளவரசிகளை திருமணம் செய்துகொண்டதால் அந்த

நாயக்க மன்னர்கள் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட படைத்தளபதிகள், மந்திரி பிரதானிகள் காலப்போக்கில் சிங்களவர்கள் ஆனார்கள். கண்டி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கண்டிய தலையாரிகளில் அரைவாசிப்பேர் தமிழிலேயே கையெழுத்திட்டார்கள்.

இன்றைய கண்டிய பிரபுத்துவ குடும்பங்களான ரத்வத்தை, அலுவிகாரை, எகலபொல, மொன்றாவெல, பிலிமத்தலாவ, கெப்பட்டிப்பொல அசல் தமிழ்ப் பெயர்களின் திரிபே. அலுவிகாரை என்பது அளவுகாரன் அதாவது நிலத்தை அளப்பவன். ஏகலபொல என்பது எல்லைப்பாதுகாவலனைக் குறிக்கும். ரத்வத்தை என்பது ரதவாதயன் என்ற சொல்லை அடியாகக் கொண்டது. அதாவது அரசனின் கட்டளைப்படி கசையடித் தண்டனையை நிறைவேற்றுபவன். மொன்றாவல தமிழ் சொற்களான மண்வேலை என்பதன் திரிபாகும். மண்வேலைக்குப் பொறுப்பாக இருப்பவன். புலவர் சக தலைவன் சமன் பிலிமத்தலாவ— தலைமைப் புலவர். இதேபோல் கெப்பெட்டிப்பொல கல் சக வேலை சக பாலன்— அதாவது கல்லாலான கட்டிட வேலையை மேற்பார்வை (பாலனம்) செய்பவன்.

பண்டாரநாயக்க என்ற பெயர் அரண்மனை பொக்கிசத்துக்கு தலைவனாக இருப்பவனைக் குறிக்கும்.

சிங்களவரின் பரம்பரையை பின்னோக்கிப் பார்த்தால் அது ஒரு தமிழன் அல்லது தமிழச்சியின் ஆரம்பத்தில் போய் முடிவதைப் பார்க்கலாம். எனவே, நாகர், இயக்கர், இயம்பர், வெடர், தமிழர் போன்ற திராவிட இனத்தவரெ வரலாற்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை

# விழுது ஒன்று வித்தானபோது....

நேரம் அதிகாலை இரண்டு மணி. அமைதியாயிருந்த அந்த வைத்தியசாலையின் முன்வீதியால் அவல ஒலி எழுப்பியவண்ணம் விரைந்து வந்த அம்புலன்ஸ் வண்டியொன்று அமைதித் திரையைக் கிழித்தவாறே வைத்தியசாலையினுள் பிரவேசித்தது. அம்புலன்ஸ் வண்டி வந்த வேகத்திற்கேற்ப அங்கிருந்த வைத்திசாலைப் பணியாளர்களும் அவசர அவசரமாக இயங்கத் தொடங்கினர். வாசலில் ஏற்கனவே காத்திருந்த தொண்டர்கள் ஓடிச்சென்று வண்டியிலிருந்து காயப்பட்ட போராளிகளை இறக்க, மற்றும் சில தொண்டர்கள் அவர்களைத் தாங்கிய 'ஸ்ரெச்சர்'களை உரிய சிகிச்சை அறைகளை நோக்கி வேகமாக இழுத்துச் சென்றனர்.

உடலின் பல பகுதிகளிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் அன்று அங்கு கொண்டு வரப்பட்டிருந்த பன்னிரண்டு போராளிகளில் ஆண், பெண் இரு பாலருமிருந்தனர். வைத்தியர்களும், தாதியரும், தொண்டருமாக பல பணியாளர்களும் தத்தமது பங்களிப்பை ஆற்றி அவசர சிகிச்சைகளை அப்போராளிகள் பெறுவதற்கு உதவிக் கொண்டிருந்தனர்.

இது அவசர நிகழ்வாகக் காணப்பட்டபொழுதும் அந்த வைத்திசாலையைப் பொறுத்தவரை மிகவும் பழக்கப்பட்டதொரு நிகழ்வாகி விட்டதெனலாம். அம் மண்ணை மீட்பதற்காக எதிரியுடன் யுத்தம் புரிந்து தம் உடலில் வீர ரணங்களை சுமந்தவாறு ஏற்கனவே வந்திருந்த பல போராளிகள் அங்கு வைத்திசாலைப் படுக்கைத் தொகுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தனர். அவர்களைப் பராமரிக்கும் பணியில் பல தாய்மாரும் சகோதர சகோதரிகளும் தினமும்



ஈடுபடுவது வழக்கமான நிகழ்வுகளே. நாம் எதிரிகளை மிகவும் அண்மித்தவிட்ட இப்போராட்ட சூழ்நிலையில் போராடுவதற்கேற்ற உடல்நிலையை — மனநிலையைப் பெற்றுக்கொள்ளாத பலர் தமது பங்களிப்பை இவ்விதத்தில் செய்து கொள்ள முன்வந்தபோது, அவர்களது பங்களிப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வைத்தியசாலை அருகாமையிலேயே அவர்களுக்குத் தங்குமிட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன.

பல மைல் தூரத்துக்கு அப்பாலிருந்து இப்புனிதப் பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்து வந்தவர்களில் ஒருவர்தான் மீனாட்சியம்மாள். ஆனையிறவுப் போர் ஆரம்பித்ததிலிருந்து பராமரிக்கும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்

வீரத்தாயுடன் ஐம்பதுக்கும் அதிகமான பெண்கள் அந்த போராளிகள் பராமரிப்புப் பணியாளர்களுக்கான விடுதியில் தங்கியிருந்தனர். அம்மாள் ஓய்வாக இருக்கும் வேளைகளில் விடுதியில் அவரைச் சூழ்ந்துகொள்ளும் பெண்கள் கூட்டமே அவரது அன்புக்குச் சாட்சியாக விளங்கிற்று.

அது எதிரிக்கு எதிரான யுத்தம் எங்கும் தொடங்கியிருந்த நேரமாகையால் இரவு, பகல் இரு நேரங்களிலும் பராமரிப்பு பணி தேவைப்பட்டது. ஆதரவாளர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதற்காக பகலில் பணி புரிந்தவர்களை விடுத்து இரவில் ஏனையோருக்கு சந்தர்ப்பம் வழங்குவார் எமது பொறுப்பாளர். இரவு, பகல் என்று பாராது தமது வீடு வாசல்களையும் விட்டு வந்து நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பல நாட்களாக பராமரிப்புப் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் பெண்குலத்தின் விழிப்புணர்வை எண்ணிப் பார்த்தபோது அது விடியலுக்கான அறிகுறிபோலவே தென்பட்டது.

அன்றைய இரவு பெண் போராளிகளுக்கான படுக்கைத் தொகுதியில் பராமரிப்பில் ஈடுபட்டிருந்த பெண்குழுவில் நானும் இணைந்திருந்தேன். அவசர சிகிச்சைகளின் பின் போராளிகள் அனுமதிக்கப்பட்ட வார்ட்டுக்களில் அவர்களுக்கு வேண்டியதைச் செய்து கொண்டிருந்தோம். கண்விழித்து நின்றிருந்த நாம், அவர்களின் கண்ணயர்வில் திருப்தி கொண்டோம். காயத்துக்கு மருந்து கட்டிய நிலையில் கண்ணயர்ந்து கொண்டிருந்த போராளி ஒருவரை நெருங்கிய மீனாட்சி அம்மாள், சிறிது நேரம் கண் இமைக்காது அப்போராளியையே பார்த்து நின்றதை என்னால் அவதானிக்க முடிந்தது. என்னருகில் வந்த அம்மாள் மெதுவாக. "என்ரை மகள் திவ்வியாவும் இவளைப் போலவே இருப்பா. படுத்திருக்கும் போது சரியாக திவ்வியாவைப் போலவே இருக்கிறா'' கூறிக் கொண்டிருந்தபோது அப்போராளியின் உடலில் மெல்லிய அசைவு தெரிந்தது. அருகில் விரைந்து சென்ற அம்மாள் அவரது தலையைத் தடவிக் கொடுத்தவாறே கையில் இருந்த விசிறியால் விசிறிக் கொண்டிருந்தார். அவ்வுருவில் தன் மகளைக் கண்டு திருப்திப்படும் அம்மாளைக் காணத் திருப்தியாக இருந்தது

வீரச்சாவடைந்தாலோ நான் கவலைப்பட மாட்டன். மண்ணுக்குச் செய்த கடமையாய் நினைச்சுப் பெருமைப்படுவன். அது தமிழர் ஒவ்வொருத்தற்ரையும் கடமைதானே?.. ஆனால் நான் இதுவரைக்கும் ஒருமுறையாவது அவளை அவளின்ர உடுப்போட காணேல்ல எண்டது தான் எனக்கு கவலை. எந்தக் கோலத்தில அவளை நான் காணவிரும்பினனோ அந்தக் கோலத்தோட இன்னும் நான் காணேல்ல. அது ஒண்டுதான் எனக்குக் கவலை.'' சொல்லும்போதே அம்மாளின் குரலில் ஏமாற்றம் தொனிக்கும்.

நியாயமான ஆசைதான். தம்மகளை வைத்தியராக, பொறியியலாளராக, இன்னும் எத்தனையோ உயர்ந்த அந்தஸ்த்துகளில் காணத்துடிக்கும் பெற்றோர்கள் பலர் வாழும் இம்மண்ணில் தன் மகளை ஒரு வீரவேங்கைக்குரிய சீருடையில் காணத்துடிக்கும் ஓர் இலட்சியத் தாயாக மீனாட்சியம்மாள் என் மனதை நிறைத்து நின்றாள். அவளது ஆசை நிறைவெற நான் மனதாரப் பிரார்த்தித்துக் கொண்டேன்.

பதினாறாம் வார்ட் சுவரில் தொங்கிக் கொண்டிரந்த கடிகாரம் ஆறு தடவை அடித்து ஓய்ந்தது. புதியவர்கள் பணியில் ஈடுபடுவதற்காக நாம் விடைபெற்றுக் கொண்டோம். ஆனால் மீனாட்சி அம்மாளோ இரவு முழுவதும் கண்விழித்த சோர்வேதுமின்றி, அவர்களைப் பிரியமுடியாத மனநிலையுடன் பொறுப்பாளரிடம் சென்று அன்றைய பகலும் தான் பணிபுரிய அனுமதி பெற்று வந்தார். அம்மாளின் ஈடுபாடும் அவரது மனநிலையும் காரணமாக பகற் பணிக்கும் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தார் பொறுப்பாளர்.

களத்திலிருந்த வந்த போராளிகளை எண்ணிப் பார்த்தபோது கனத்த என் நெஞ்சம் மீனாட்சி அம்மாளை எண்ணிப் பார்த்தபோது இளகிப் போனது. விடுதிக்குச் சென்று காலைத் தேனீர் அருந்திக் கொண்டிருந்த நான் எங்கோ தொலைவில் இருந்து காற்றில் மிதந்து வந்த, 'போர் இன்னும் ஓயவில்லை எங்கள் தமிழ் ஈழமண்ணில் புலிகளின்..' என்ற பாடலில் என்னை மறந்திருந்தேன். விடுதிக்கு முன் வீதியில் வேகமாக வந்துநின்ற மோட்டார் சைக்கிள் ஒலி என் சிந்தனையைக் கலைத்தது. அவசர அவசரமாக இறங்கி விடுதியை நோக்கி வந்த இளைஞன் ஒருவன் மீனாட்சி அம்மாளை விசாரித்ததுடன் அவரைத் தான் அவசரமாகச் சந்திக்க வேண்டும் என்பதையும் தெரிவித்தபோது ஏதோ விபரீதம் நடந்துவிட்டதாக என் உள்மனம் உணர்த்தியது. அதனால், காரணத்தை அவசரமாக வினாவினேன். அவ் விளை ஞனிடமிருந்து வந்த வார்த்தைகள் என் செவியில் பட்டபோது எனக்கு ஓவென்று கதறியழ வேண்டும் போலிருந்தது.

மீனாட்சி அம்மாளின் மகள் திவ்வியா ஆனையிறவுக் களத்தில் எதிரிப்படையை அழித்து விரச்சாவைத் தழுவியதால் — அம்மாளை அவளது சொந்த ஊருக்கு அழைத்துச் செல்லவே அவன் வந்திருந்தான்.

மீனாட்சி அம்மாள் கூறுவதுபோல திவ்வியாவின் மறைவுகூட எனக்கு பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் இலட்சியத்தாயின் இறுதி ஆசையை

செல்ல உதவும்படியும், ஊருக்கு சென்றபின் தான் கூறுவதாகவு அவ்விளைஞன் கேட்டுக் கொண்டான் என் கால்கள் வைத்தியசாலை நோக்கி வேகமாக நடக்க தொடங்கின. அம்மாளின் நிராசையான அந்த ஆசை என் காதி ஒலித்துக் கொண்டே இருந்தது. "எந்த கோலத்தோட அவளை நான் பார்க் விரும்பினேனோ அந்தக் கோலத்தி இன்னும் நான் காணேல்லை. அ தான் என்ரை கவலை. திரும்ப திரும்ப என் காதில் ஒலித்த அந் வார்த்தைகளை ஜீரணிக்க மு யாதவளாய் வைத்தியசாலை அடைந்தேன். அங்கு சாந்தமே வடிவாய் போராளிகளைப் பராம ரிப்பதிலும் ஆறுதல் வார்த்தை கூறுவதிலும் ஈடுபட்டிருந்த அம்மாளை அணுகி, "அம்மா, உங்கட வீட்டுக்கு கிட்ட இருக்கிற ஒரு தம்பி ஊருக்கு போறாராம். நீங்க வீட்ட இருந்து வந் கனநாள் என்டபடியால் விரு மெண்டால் போய்விட்டு வரச்சொல் பொறுப்பாளர் உங்களைக் கூட்டி வரட்டுமாம்" என்றேன் அமைதியாக.

"ஐயோ பிள்ளை, என்ர குஞ்சுகளை இந்த நிலையிலை இஞ்ச விட்டிட்டு நான் போறதோ? இன்னும் சில நாள் கழித்து வசதி கிடைத்தால் போகிறேன் எண்டு சொல்லுங்கோ" அம்மாளின் குரலில் உறுதி தொனித்து நின்றது எனக்கோ தர்மசங்கடமான நிலை சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் திணறிய நான் அம்மாவுக்கு விளங்காத வகையில் ஏனைய சில பராமரிப்பு பணியாளர்களுக்கும் போராளிக ளுக்கும் நிலமையைக் கூறினேன் அம்மாவின் உறுதியான மனதை நான் ஏற்கனவே உணர்ந்து கொண்டவள் மகளின் மறைவை ஜீரணிக்கும் வல்லமை அவளிடம் இருப்பதை நான் நன்கு உணர்வேன். ஆயினும் அடிக்கடி எதிர்த்த ஆசையின் ஏமாற்றம் தரும் எதிரொலியை ஏற்றுக்கொள்வாளோ என எண்ணிக் கூறத் தயங்கினேன்.

நிலைமையைப் புரிந்துகொண்ட மற்ற சில தாய்மார், "அம்மா எதற்கும் நீங்கள் ஒருமுறை வீட்டை போய் வந்தால் பிறகு நீங்கள் வந்ததும் நாங்கள் போய் வரலாம். எதற்கும் கிடைத்த பிரயாண வசதியை விடாமல் போய் வாங்கோ" என்றனர். "அம்மா நீங்கள் சந்தோசமாய்ப் போட்டுக் கெதியிலை வாங்கோ" என்றனர் சில போராளிகள். அம்மா புறப்படுவதாயில்லை. இறுதியில் வேறு வழியின்றி நானே, "அம்மா உங்கள் மகள் திவ்வியாவுக்கு கையில ஒரு சின்னக் காயமாம். அதாலை அவவை ஆஸ்பத்திரிக்கும் கொண்டுவரவில்லை. விரும்பினால் நீங்கள் போய் வன்னி மெடிக்சிலை போய்ப் பார்க்கலாமாம்" என்றேன்.

நான் எதிர்பார்த்தபடியே அம்மாளின் முகத்தில் எதுவித சோக ரேகைகளும் படரவில்லை. "பிள்ளைகள் நான் போயிட்டுக் கெதியில வருவேன் என்ரை குஞ்சுகளிட்டை" என்று விடைபெற்றவளாக அம்மாள் என்னுடன் சேர்ந்து விடுதியை நோக்கி நடக்கத் தொடங்கினாள். எதுவித பரபரப்புமின்றி வழமைபோலவே மகிழ்ச்சியாக என்னுடன் கதைத்துக் கொண்டுவந்த அம்மாளின் அருகில் சென்றுகொண்டிருந்த என்னால் எதுவுமே பேசமுடியவில்லை. தலையை மாத்திரம் அசைத்தபடி பெரியதொரு உண்மையை முழுதாக விழுங்கிவிட்ட குற்ற உணர்வுடன் நான் நடந்துகொண்டிருந்தேன். நீண்ட நாள் ஆசையொன்று நிறைவேறப் போகின்ற குதூகலம் அம்மாளிடம் தெரிந்த அந்தவேளை நான் என் பிரார்த்தனையின் ஏமாற்றத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் மறைக்க முயன்றுகொண்டிருந்தேன்.

சீருடை தரித்த தன் மகளைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 17



மார்ஷல் சுயிக்கோவ்

வோல்காவின் கரையில் மாபெரும் வெற்றியை அடை..து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. கப்பல்படை, வான் படைவீரர்களின் முன் நான் ..ன்றிக்கடன் பட்டவன் என்பதை ..ான் இந்த ஆண்டுகள் பூராவும் நான் மறைக்கவில்லை. 62 வது படைக்கு ..ிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட அனைத்தையும் இந்தக் கடினமான ..ாட்களில் வோல்காவின் கரையில் மாபெரும் வெற்றியை அடைந்து முப்பது ஆண்டுகளுக்கு இவர்கள் கொண்டு வந்தனர். எதிரியின் மீது ..ாக்குதல் தொடுத்து, எதிரியைப் ..லம் குன்றச் செய்து, எதிரியின் ..க்திகளை விரயப்படுத்த எங்களுக்கு ..வோல்க்கா கடற்படையின் மாலு..ிகளும் விமானிகளும் தமது ..ீரங்கிகள், இயந்திரப் பீரங்கிகளாலும், ..ிமானக் குண்டுகளாலும் உதவினர். ..ிகக் கடினமான சூழ்நிலைகளில் அவர்கள் ஆயுதத் தளபாடங்களையும் ..ணவுப் பொருட்களையும் படைக்குக் கொண்டு வந்தனர். மாலுமிகள் ..ாயமடைந்தவர்களையும் படை..ப்பிரிவுகளின் தலைமையகங்களையும் (இழப்பை ஈடு கட்டி முழுமையை ..டைவதற்காக) அழைத்துச் சென்றனர்.

வோல்காவின் பனிக்கட்டிகள் உருவாகத் தொடங்கியதும் 62வது படை எத்தகையதொரு கடினமான ..ிலையில் மாட்டிக்கொண்டது என்பது ..ற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். பனிக்கட்டிகள் உருவாவதை பாசி..ஸ்டுகள் கவனித்து வந்தனர். அவர்கள் ..ங்காவது பெரும் கடினமான பனிக்கட்டி உருவாவதைக் கண்டதுமே உடனடியாக ஆறு துவார மார்டர் ..ீரங்கிகளால் சுட்டு இப் பனிக்கட்டியை துண்டுதுண்டாக உடைத்தனர்: இதனால் நாங்கள் ..சப்பிளை தளங்களிலிருந்து துண்டிக்கப்பட்டோம். இதிலிருந்து மீள வழியேயில்லை யெனத் தோன்றியது. ஆனால் வழியிருந்தது.

சிறு பனிக்கட்டிகள் மிதந்து சென்றபோது, அ தூபாவிலிருந்தும் ..துமாக் துறையிலிருந்தும் "அப்ஹாஸெத்ஸ்", "புகச்சோவ்", "ஸ்பர்த்தாக்", "பன்ஃபீலவ்" ஆகிய நீராவிப் படகுகளும் 11, 12, 13, 61, 63 என்ற இலக்கம் தாங்கிய கவச மோட்டார் படகுகளும் ஸ்டாலின் ..கிராடியிலிருந்த எங்களை நோக்கி இடா பாடுகளுடன் ஆபத்தை மீறி வந்தன. பனிக்கட்டிகள் அதிக மானபோது நீராவிக் கப்பல்களால் வர முடியவில்லை. கவச மோட்டார் படகுகள் பெரும் பணியைத் தாமே ஏற்றன.

இழப்புகள், அதுவும் பெரும் இழப்புகள் ஏற்பட்ட போதிலும் அவற்றால் வீரஞ்செறிந்த மாலு..மிகளைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. முன்னாள் கவச மோட்டார் படகு ஸ்குவாட்ரன் கமான்டர் மிஹயீல் எஃபீமவிச் சரோக்கினின் நினைவுக் குறிப்புகள் இதோ என்முன் உள்ளன. வோல்கா கரையில் நடந்த சமரில் பங்கே ..ற்றதற்காக இவருக்கு "செம்பதாகை",

எதிர்நோக்கியிருந்தது. சிறிய, பாதுகாப்பற்ற படகுகள் மீது எதிரிகள் பீரங்கிகள் குறிபார்த்துச் சுட்டன, பாசிச குண்டுவீச்சு விமானங்கள் இவற்றின் மீது குண்டுகளை வீசின. மிதக்கும் கண்ணிவெடிகள் இவற்றி ற்குப் பெரிதும் அபாயகர மானவையாக இருந்தன. கவச மோட்டார் பட்குகளின் ஸ்குவாட்ர னுக்குத் தலைமை தாங்கிய மி. எ. சரோக்கின், வோல்கா ஆற்றில் பனிக்கட்டிகள் தோன்றிக் கொண்டி ருந்த மிகக் கடினமான சூழ்நிலைகளில், 1942ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் இரண்டாவது பாதியில் நான்கு முறை ஸ்டாலின்கிராட்டிற்கு ஆற்றைக் கடந்து வந்தார். ஆயுதத் தள பாடங்களையும் மற்ற சப்ளைகளையும் கொண்டுவந்து, காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்றார்.

செப்டம்பர் 15ஆம் தேதி இரவு ரதீம்த்செவின் 13வது கார்டுப் படை டிவிசனை எப்படி ஆற்றின் வழியே கவச படகுகளில் ஸ்டாலின் கிராட்டிற்கு அழைத்துச் சென்றான் என்று சரோக்கின் நினைவு கூர்கிறார்: "ஒவ்வொரு நாள் இரவும் கவச மோட்டார் படகுகள் நூற்றுக்கணக்கில் காயமடைந்தவர்களையும், நூற்றுக் கணக்கான டன் சரக்குகளையும் ஏற்றிச் சென்றோம். சில சமயங்களில் நாங்களும் பாசிஸ்டுகளை நோக்கி பீரங்கிகளால் சுட வேண்டி வந்தது. 13ஆம் எண்ணிட்ட கவச மோட்டார் படகில் ராக்கெட் பீரங்கி வைக்கப்பட்டிருந்தது. இதைத்தான்

கவச மோட்டார் படகுகள் ரினக், ஸ்பர்தானவ்கா பகுதிகளினுள் புகுந்து – படையிலிருந்து துண்டிக்கப்பட்ட துருப்புகள் இங்குதான் இருந்தன – ஆயுதத் தளபாடங்களை சப்ளை செய்தன. சகலவிதமான ஆயுதங்க ளிலிருந்தும் பாசிஸ்டுகளால் சுட்டதால் இங்கு செல்வது மிகவும் கடினமானதாக இருந்தது. காய மடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு கவச மோட்டார் படகுகள் திரும்பிய போது பாசிச டாங்கிகள் மறைவிடங்களிலிருந்து எங்களை நோக்கிச் சுட ஆரம்பித்தன. ஒரு டாங்கியை நாங்கள் தகர்த்து அழித்தோம். அந்த நேரத்தில் சீனியர் லெப்டினன்ட் பரிஸ் ஜித்தோமிர்ஸ்கி நின்ற மேல்தட்டில் ஒரு குண்டு வந்து விழுந்தது. அவருடைய கால்களில் படுகாயம் ஏற்பட்டது. சுக்கானில் நின்ற முதல் ரேங்க் சார்ஜன்ட் மேஜர் எமேலின் கொல்லப்பட்டான். கவச மோட்டார் படகு ஓட்டுனர் இன்றி தன் விருப்பப்படி சென்றது. கடும் வலியையும் பொருட்படுத்தாமல் பரிஸ் ஜித்தோமிர்ஸ்கி எழுந்து, இரத்தம் சொட்டச் சொட்ட, கவச மோட்டார் படகைச் செலுத்தி கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்."

"ஒருமுறை, வசீலி கரதேன்கோ தலைமையிலான படகில் வலது கரையிலிருந்த டிராக்டர் தொழிற் சாலையை நோக்கி சென்று கொண்டிருந்தேன். கும்மிருட்டு நிலவியது. வேண்பனியும் மழையும் கலந்து பெய்து கொண்டிருந்தன. பீரங்கிகளும் இயந்திர பீரங்கிகளும்



நாங்கள் அன்போமு 'கத்சா' என்றழைத்தோம். இந்தக் கவச மோட்டார் படகு மறைவாக, கரையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்து, அங்கிருந்து பாசிஸ்டுகளை நோக்கி ஏவுகணைகளைத் தொடுத்தது."

அக்டோபரில் எதிரி டிராக்டர்த் தொழிற்சாலையைப் பிடித்து வோல்காவை அடைந்த போது மூன்று துப்பாக்கிப்படை பிரிகேடுகளும் (115வது, 124வது, 143வது பிரிகேடுகள்) 112வது துப்பாக்கிப்படை டிவிசனின் ஒரு பகுதியும் படையின் முக்கிய சக்திகளிடமிருந்து துண்டிக்கப்பட்டன. இவற்றிற்கு உடனடியாக ஆயுதத்

சுட தயாராய் இருந்தன. படகு மெதுவாகச் சென்றது. முதலில் எங்கள் படகு கரையை அடைந்தது. கரையில் உள்ள நிலவரத்தைக் கண்டறிய, எங்களுடைய துருப்புகள் உள்ள இடத்திற்குத்தான் வந்திருக்கி றோமா இல்லையா என்றறிய இரண்டு கப்பற் படைவீரர்கள் தானியங்கித் துப்பாக்கிகள், எறிகுண்டுகளுடன் கரையில் குதித்தனர். சிறிது நேரங்கழித்து 'ஏணிப்படியை இறக்குங்கள், நம்மவர்கள்தான் இருக்கின்றனர்' என்ற சத்தம் கேட்டது. எங்களுடைய கப்பற்படை வீரர்களும் இன்னும் பல போர்வீரர்களும்

ஆவனைக் கீழ் தளத்தில் அடைத்து, இரண்டு தானியங்கித் துப்பாக்கி வீரர்களை காவலுக்கு வைக்கும்படி கட்டளையிட்டேன்."

இதனிடையே மாலுமிகளும் போர் வீரர்களும் விரைவாக ஆயுதத் தளபாடங்களை இறக்கிவிட்டு, காய மடைந்தவர்களை ஏற்றினர். நாங்கள் முழு வேகத்தில் திரும்பப் புறப்பட்டோம். எதிரி எங்களைச் சுடவில்லை. கீழ்தளத்திற்குச் சென் றேன். அந்த ஜ?னியர் பாசிஸ்டு அதிகாரியை எப்படிப் பிடித்தனர் என்று எனக்கு விளக்கினர்.

சாதாரணமாக இரவில்தான் நாங்க ளும் சரி எதிரியும் சரி சூடான உணவு உண்டோம். எதிரி அருகிலிருந்தான். பாசிஸ்டுகளுக்கு உணவுப் பொருட்கள் போதாமலிருந்தன. ஆனாலும், உற்சாக மூட்டும் பொருட்டு அவர்களுக்கு நிறைய மதுபானத்தைத் தந்தனர். அளவிற்கதிகமாகக் குடித்ததாலோ என்னவோ அந்த பாசிச இளம் அதிகாரி எங்களுடைய சமையல றையின் வாசனையால் கவரப்பட்டு அங்கு வந்தான். கும்மிருட்டு நிலவியதால் எப்படி, எங்கே வந்தான் என்று யாருக்கும் தெரியவில்லை. உணவு வழங்கிக் கொண்டிருந்த எங்கள் போர்வீரனை அணுகிய அவன் ஏதோ ஜெர்மன் மொழியில் கூறினான். தும் முன் நிற்பது பாசிஸ்டு என்பதைப் புரிந்துகொண்ட எங்கள் போர்வீரன், சற்றும் கலங்காமல் தன் கையிலிருந்த 'ஆயுதமாகிய' பெரிய கரண்டியால் அவன் தலையில் ஓங்கியடித்தான்.

அந்த பாசிஸ்டு உணவிற்காகப் போன இடத்தில் எப்படி சிறைபட்டோம் என்று குழம்பியிருக்க வேண்டும். நடுங்கிப்போன அவன் செஞ்சேனைக் கப்பற்படை வீரர்களின் கறுப்பு தொப்பிகளிலிருந்த அடையாளத்தைக் கண்டு, தான் 'கறுப்பு மரணத்தின்' கரங்களில் சிக்கியதை – எங்களுடைய கடற்படையினரை டாக்டர் கோயபெல்சின் நாஜி பிரசாரப் பிரிவு இப்படித்தான் அழைத்தது – புரிந்துகொண்டான்.

வோல்காவில் எங்களுடைய கப்பற்படையினரின் வீரதீரங்களைப் பற்றி நிறைய எழுதலாம். வைஸ் அட்மிரல்கள் தி. தி. ரொகச்சோவ், எஸ். ஏம். வரபியோவ், கப்பற்படை அதிகாரி மி. எ. சரோக்கின் போன்றோரின் தலைமையிலான இக்கப்பற்படை இயலாதவற்றை யெல்லாம் செய்தது.

இக்கப்பற்படையின் போர்க்கப்பல்கள் தான் எவ்வளவுமுறை தமது பீரங்கிகளால் சுட்டு, போர்முனையில் ஏற்பட்ட பிளவுகளை – இவற்றின்

தமிழ்த் ஆவணப்படுத்தல்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்
## அத்தியாயம் இருபத்திநான்கு

(தொடர்ச்சி)

டொவ் லண்டவ்வை சுமந்து சென்ற புகையிரதம், தற்போது ஐம்பது பெட்டிகளின் அளவு நீண்டதாயிருந்தது. தற்போது ஒச்விற்சுக்கு முன் கடைசியாக இருக்கும் கிறிசனவ் நகரில் நின்று கொண்டிருந்தது. புகையிரதத்தில் இருந்த ஐந்து பேருக்கு ஒருவர் ஏற்கனவே மரணித்திருந்தார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் புகையிரதப் பெட்டிகளின் பக்கங்களோடு சேர்ந்து உறைந்துபோய் விட்டதால் தங்கள் கை கால்களின் தசைகளைப் பிய்த்துக் கொள்ளாமல் அங்கிங்கு அசைய முடியாதிருந்தனர். அனேக பெண்கள் தங்கள் குழந்தைகளை புகையிரதப் பாதைகள் அருகே வெளியே வீசி, ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்ற குடியானவர்களை அந்தக் குழந்தைகளை எடுத்து ஒளித்து வைத்துக் காப்பாற்றுமாறு வேண்டிக் கதறினர். புகையிரத முடிவில் புதிதாகச் சேர்க்கப்பட்ட ஆறு பெட்டிகளில், இறந்து போய்விட்டவர்களை எடுத்து அடுக்கினார்கள். மிக மோசமான நிலையில் இருந்தாலும் டொவ் அவதானமாகவும் விழிப்பாகவும் இருந்தான். அவனுக்கு என்ன நடக்குமென நன்றாகத் தெரிந்தேயிருந்தது. ஆகையால் எதாவது செய்து தப்பிக் கொள்ள வேண்டுமானால், தன் மூளையைப் பாவிக்க இதுதான் தருணமெனவும் அவனுக்கு தெரிந்தேயிருந்தது. புகையிரதம் திரும்பவும் உருளத் தொடங்கியது. ஒச்விற்சுக்கு இன்னும் ஒரு மணி பிரயாண தூரமேயிருந்தது.

**ஒஷ்விற்ஸ் 1941 – 1942**

கோஎஸ் பேர்க்கினோவின் செயற்பாடுகளை முழுமையான தாக்கக் கடுமையாக உழைத்தான். அவன் பலிக்கடாக்களை இறுதி வரை அமைதியாயிருக்கச் செய்ய வஞ்சகமான முறைகளை வடிவமைத்தான். விசவாயுக் கூடங்களைச் சுற்றி அழகான மரங்கள், புற்தரைகள், மலர்ப் படுக்கைகளை அமைத்தான். பல பாசைகளில் துப்புரவாக்கல் நிலையம் என எழுதப்பட்ட அறிவிப்புப் பலகைகளை நட்டு வைத்தான். பலியாகப் போகப் போகிறவர்களை இங்கு பரிசோதனை செய்து, தொற்றுக் கிருமிகளகற்றும் குளியலுக்குப் பிறகு புதிய ஆடைகளை வழங்கி ஒச்விற்சுக்குச் சூழவுள்ள கட்டாய வேலை முகாம்களில் வேலைக்கு அனுப்பப் போவதாகச் சொல்வதே முக்கிய மான வஞ்சகமான முறையாக விருந்தது. வாயுக் கூடங்களைச் சூழவும், கீழும் நன்றாக வடிவமைக்கப்பட்ட ஆடை மாற்றும் நிலையங்கள் அமைக்கப் பட்டிருந்தன. உடைகளைத் தொங்க விடுவதற்கு இலக்கங்கள் இடப்பட்ட முளைகள் இருந்தன. தாங்கள் தங்கள் இலக்கங்களை ஞாபகம் வைத்துக் கொள்ளுமாறு எல்லோருக்கும் சொல்லப்பட்டது. பேன்களையகற்ற மயிர் வெட்டப் பட்டதோடு, குளிக்கச் செல்லுமுன் தங்கள் கண்ணாடிகளைக் கழற்றி விடும்படி கேட்கப்பட்டனர். எல்லோருக்கும் இலக்கங்கள் இடப்பட்ட சவர்க்காரம் வழங்கப் பட்டது. முறைக்கு மூவாயிரம் பேராக அவர்கள் நிர்வாணமாக நீண்ட வழிகளின் ஊடே அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த வழிகளில் பத்துப் பன்னிரண்டு பெரிய கதவுகள் இருந்தன. அவை திறக்கப்பட்டதும் பிரமாண்டமான குளியலறைகள் இருந்தன. அதிகமானவர்கள் என்ன நடக்கிறது என்பதை உணரமுடியாத அளவு விறைத்துப் போயிருந்தனர்.

அவர்கள் அமைதியாக அறைகளுக்குள் சென்றனர். சிலர் சவர்க்காரக் கட்டிகளைப் பரிசோதிக்கத் தொடங்கி அவை கல்லால் ஆனவை என உணர்ந்து கொள்வர். சிலர், நீர் வரும் குமிழ்கள் போலியானவை என்றும் குளியலறையில் இருந்து நீர் வெளிபோவதற்கு எவ்வித வடிகாலும் இல்லை எனவும் கண்டு கொள்வர். இறுதி நேரத்தில் பயம் ஏற்படுதல் நிகழ்ந்து வெளியே வர முயல்வதுண்டு. இந்த நிகழ்வுக்காகக் காத்திருக்கும் அதிரடிப் படையினர் அவர்களைத் தடியால் அடித்தும், சாட்டைகளால் அடித்தும் உள்ளே தள்ளி விடுவார்கள். இரும்புக் கதவுகள் பூட்டப்பட்டு தாளிடப்படும்.

சைக்கிளோன் – பி கலன்கள் ஒன்று அல்லது இரண்டு அவ்வறைகளுக்குள் வீசப்படும். பத்துப் பதினைந்து நிமிடங்களில் எல்லாம் முடிந்துவிடும்.

இப்போது சொன்டர் கொமாண்டோஸ் இவர்கள் ஒச்விற்ஸ் முகாமில் வாழும் சுத்திகரிப்பு குழுக்களாகும். அவர்கள் விச வாயுக் கூடங்களை வெறுமையாக்கி, சடலங்களை எரி கூடங்களுக்குக் கொண்டு போவர். எரிப்பதற்கு முன் தங்கப் பற்களும், இழுத்தெடுக்கப்பட்டு, மோதிரங்களும் கழற்றப்படும். இவைகள் உருக்கப்பட்டு பேர்லினுக்கு அனுப்பப்படும். சிலவேளைகளில் கடதாசிகளுக்குப் பாரமாக வைக்க பாவிக்க, நல்ல வடிவத்தில் அமைந்திருக்கும் மண்டையோடுகள் யேர்மன் காவலர்களுக்கு விற்பதற்காக எடுக்கப்படுவதுமுண்டு. உடைகளில் காணப்படும் குடும்பப் படங்களிலும் காதல் கடிதங்களிலும் சிறிதளவு அக்கறையே காட்டப்படும். சிப்பாய்கள் இதைவிட உடைகளின் உள், வெளித் துணிகளின் நடுவே வழக்கமாக ஒளித்து வைக்கப் பட்டிருக்கும் நகைகளைத் தேடுவதில் அதிக அக்கறை காட்டினர். அடிக்கடி உடுப்புக் குவியல்களுக்குள் குழந்தைகள் ஒளித்து வைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்படும். அவை அடுத்து குளியலுக்கு அனுப்பப்படும்.

கோஎஸ் தன் துருப்புகளுடன் நல்லதாக நடந்து கொண்டான். பேர்க்கினோவுக்கு அதிகளவில் புகையிரதங்களில் ஆட்கள் வந்தால் அவர்கள் கடுமையாக வேலை செய்வார்கள். இவர்களுக்கு மெலதிக பங்கீட்டுணவுகளாலும், ஸ்நாப்ஸ்களாலும் பரிசளிப்பான்.

அவனிடம் அனுப்பியபோதும் குழப்பம் அடையவில்லை.

கோஎஸ் தனக்குக் கீழ் இருந்த பொறியியலாளர்களையும், விஞ்ஞானிகளையும் குறைந்த செலவில் உச்சச் செயல்பாட்டுத் திறனை அடையும்படி நெருக்கினான். அவனுடைய கட்டிடக்கலை வல்லுனர்கள் விரிவாக்கத்துக்கான விரிவான நிலத் திட்டப் பதிப்புகள் தயாரித்திருந்தார்கள். ஒரு திட்டத்தின்படி, விச வாயுக் கூடங்களின் தளங்கள், நீரியல் அழுத்த முறைகளால் எரிகூடம் அமைந்திருக்கும் மட்டத்திற்கு உயர்த்தப் படலாம். வேறு பல திட்டங்களும், பேர்க்கினோவின் செயற்பாட்டுத் திறனை ஒரு நாளைக்கு நாற்பதாயிரம் கொலைகள் வரை நிகழ்த்தக் கூடியதாக அதிகரிக்கும் நோக்கில் தீட்டப்பட்டிருந்தன.

பேர்க்கினோவில் வேலைகளைத் தாமதமாக்கும் ஒரு விடயமாகச் சடலங்களைத் தொலைத்துக் கட்டும் வேலை இருந்தது. முதலில், வாயுக் கூடங்களில் இருந்து, நேராக வெளியான இடங்களில் இருந்த குழிகளில் இடப்பட்டுச் சுண்ணாம்பால் மூடப்பட்டன. இதனால் ஏற்பட்ட பிண நாற்றம் சகிக்க முடியாதிருந்தது. ஆகவே, யேர்மன் துருப்புக்கள், யூத சொன்டர் கொமாண்டோசைக் குழிகளைக் கிண்டி, உடல்களை எரித்து, எலும்புகளை நொருக்கிவிடக் கட்டாயப்படுத்தினார்கள். ஆயினும், வெளியே எரிப்பது துர்நாற்றத்தை விளைவித்ததால், உள்ளக எரிகூடங்களை நிறுவவேண்டியது அவசியமாயிற்று.

டொவ் லண்டவ்வை சுமந்து வந்த புகையிரதம் ஒச்விற்சைக் கடந்து பேர்க்கினோவில் பெட்டிகளை இணைக்கும் ஒரு இடத்தில் போய் நின்றது.

**லியோன் யூறிஸ்**

## அத்தியாயம் இருபத்திஐந்து

டொவ் பசியால் குற்றுயிராயும் குளிரால் நீலம் பாரித்தும் போயிருந்தான். ஆனால் வருடக் கணக்காக அவன் அபாயத்தினூடேயும், மரணத்தின் விளிம்பிலும் நடமாடி வந்ததால் இந்த நிலையிலும், அவன் உள்ளுணர்வுகள் தப்பிப் பிழைத்திருப்பது



## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்ந்த கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை **27 - 11 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## ஏன் புலம்பெயர்ந்தாய்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

கார்த்திகை பிறந்தால் ஐக்கிய இராச்சியம் எங்கும் சகலரது ஆடையிலும் சிவத்த பூ ஒன்றைக் காணலாம். இது தான் பொப்பி (Poppy) மலர். தம் தாயகம் காக்க தம் உயிர் ஈந்த யுத்தவீரர்கள் நினைவாக மக்கள் இதனை அணிந்து குறிப்பாக உலக யுத்த நேரத்தில் உயிரிழந்த வீரர்களுக்கு தம் இதய அஞ்சலிகளைச் செலுத்தி பிறர்வாழ தம்மையழித்த அந்த உன்னத மனிதர்களது நினைவென்றும் நீங்காது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றனர். இது தேசப்பற்றினை வளர்க்கின்ற செயற்பாடாக பெருமதிப்புடன் தொடர்ந்து வருகிறது. இந்த மலர் விற்பனை மூலம் வரும் பணம் 2ம் உலகயுத்தத்தில் பங்கெடுத்த வீரர்களின் குடும்பங்களின் நலன்களைக் கவனிக்கச் செலவிடப்பட்டு வருகிறது.

இந்த பொபி மலர் அணியும் சம்பிரதாயம் இலக்கியத்தின் இயங்கியலாக உள்ளது. 1வது உலக யுத்தத்தை அடுத்து பிரித்தானியா ஒரு மில்லியன் வீரர்களை இழந்ததும் அல்லாமல் இரண்டு மில்லியன் வீரர்கள் காயப்பட்ட வரலாற்றையும் தனதாக்கிக் கொண்டது.

முதலாவது உலக யுத்த காலத்தில் வயல்வெளிகளிலும் திறந்த வெளிகளிலும் நிறைந்து கிடந்த சிவத்த பொபி மலர்களைக் கண்ட கனடிய வைத்தியர் கேணல் ஜோன் மக்குறு பின்வரும் ஆங்கிலக் கவிதையை எழுதி பொபி மலர்களின் சிவப்பு பரவலை யுத்தவீரர்களின் நினைவோடு இணைத்தார். மரணித்த வீரன் ஒருவன் பாடுமாற் போல் அவர் இந்தக் கவிதையை அமைத்தார்.

வயல் வாய்க்கால்களின் அருகினிலே அணி அணியாய் குறுக்கும் நெடுக்குமாய் பரந்து விரிந்து கிடக்கும் பொபி மலர்கள் எங்கள் தாயகத்தை எங்களுக்கு இனங்காட்டு கின்றன வானிலே இன்னும் துணிவுடன் பாடிச்செல்லும் வானம் பாடிக்கு துவக்குகளின் சத்தத்தை இப்பொழுது கேட்பது அரிதாகிவிட்டது.

நாங்கள் மரணித்த மனிதர்கள் சில நாட்களுக்கு முன் நாமும் வாழ்ந்திருந்தோம்

காலை மலர்வதையும் அஸ்தமனத்து கதகதப்பையும் கண்டிருந்தோம் நாம் அன்பு செய்தோம் அன்பு செய்யவும் பட்டோம்

தற்போது இந்த வயல்வாய்க்கால்களின் அருகே சயனித்துக் கிடக்கின்றோம்.

எதிரியுடனான உங்கள் சண்டையைத் தொடருங்கள் உங்களுக்காக எங்கள் கைகளில் ஏந்தி நின்ற விடுதலைத் தீயை

இங்கே இறக்கி வைத்துள்ளோம் அதனை உயர உயர்த்திப் பிடியுங்கள் நீங்கள் எங்கள் மேல் வைத்த நம்பிக்கையை மறப்பீர்களானால் நாங்கள் அமைதியாகத் தூங்க மாட்டோம் சிவத்த பொபி மலராய்

வயல் வாய்க்கால் எங்கும் விரிந்து பூத்துக்குலுங்கி நினைவூட்டிடுவோம்.

ஆம். அந்த வைத்திய கவிஞனுக்கு பொபி மலர்கள் தேசப்பற்றினை வீறு கொண்டெழ வைத்தது. யுத்தவீரர் குருதிக் குறியீடாக பரந்து கிடந்த சிவப்பு பொபி மலர்த் தோற்றத்தைக் கண்ட அக் கவிஞனின் தூக்கம் தேசபக்தியால் கலைந்ததினால் பிறந்த இந்தக் கவிதை யுத்தவீரர் நினைவினை துலங்க வைக்கும் சின்னமாக பொபி மலரை இலக்கியமாக்கியது.

நீங்கள் பெருமையுடன் சயனித்து
இன்று மீண்டும் எழுந்து நிற்கின்றீர்கள்.
நீங்கள் இறக்கி வைத்த விடுதலைத் தீயை
நாம் உயரத் தூக்கி நிற்கின்றோம்.
உங்கள் மேல் நாம் வைத்த நம்பிக்கையின் அடையாளமது.
மாவீரர் செங்குருதி என்றுமே அழிவதில்லை
என வானிலே துணிவுடன் எழுதி நிற்கும்
பொபி மலர்களின் சிவப்பு வர்ணத்தை வாழ்த்தி வணங்குகின்றோம்
மாவீரர் திருமேனி தீண்டிய மண் எழுந்ததினால்
பொபி மலரின் சிவப்பும் ஒளி உமிழ்கின்றது.
தற்பொழுது நாம் ஏந்தி நிற்கும் விடுதலைத் தீப்பந்தமும்
அணிந்திருக்கும் சிவத்த பொபி மலரும்
எங்கள் மாவீரர்க்கு நாம் அளிக்கும் வணக்கத்தின் சின்னங்கள்
மாவீரர்களே உங்கள் மரணம் அர்த்தமற்றதாகி விட்டதாக அஞ்சாதீர்கள்
நீங்கள் உங்கள் வாழ்வால் எங்களுக்கு படிப்பித்த பாடத்தை
இந்த வயல்வாய்க்கால்கள் அருகினிலே நாம் படித்துநிற்கின்றோம்.

இவ்வாறு இலக்கியம் சமுதாய இயங்கியலாகி, பொபி மலர் மக்களால் தம் யுத்த வீரர்கள் நினைவாக அணியப்பட வேண்டிய தேசிய சின்னமாக உருவெடுத்ததும் பிரான்சிய செயலாளர் கியூரின் பொபி மலரை செயற்கையாகச் செய்து விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு முன்னாள் படையினரது நலன்களைக் கவனிக்கலாம் என்றார். அதனைக் கவனத்தில் எடுத்த பிரித்தானியப் பிரிவினர் 1921ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ம் நாள் பொபிச்ச மலரை விற்பனை செய்து 106,000 பவுண்ஸ் நிதி சேர்த்து காலிழந்தவர்களுக்குச் செயற்கை கால்கள் தயாரிப்பதற்கு அதனைப் பயன்படுத்தினர்.

யுத்தத்தில் இரண்டு கால்களையும் இழந்த மேஜர். கவ்சன் 05.06.1922 ல் 5 ஊழியர்களுடன் ஒரு பொபி மலர்களைச் செயற்கையாகத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து பொபி மலர் அஞ்சலிக்கு செயற்கைப் பொபி மலர்களைப் பெருமளவில் தயாரிக்கும் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். 1924 ம் ஆண்டளவில் 24 மில்லியன் செயற்கை பொபி மலர்கள் தயாரிக்கப்பட்டு விற்பனையாகி இம் மலரணியும் வழக்கத்தை தேச கலாச்சாரமாக மாற்றி இன்று வரை தொடர வைக்கிறது.

உலகெல்லாம் வாழும் மக்கள் தம் மாவீரர் நினைவினை வெறும் கவிதை ஓசைகளில் மட்டும் உலாவர விடாது அதனை அந்த யுத்தவீரர்களின் இலட்சியங்களை எய்துவதற்கான செயற்பாடாக மாற்றிவருவதை மேலே கூறிய வரலாறு எடுத்துக் காட்டுகிறது. தமிழீழ மக்களாகிய நாமும் எமது மாவீரர் நினைவுகளைச் சுமந்தால் மட்டும் போதாது அவர்கள் இலட்சியம் விரைவில் நிறைவுற இயன்றதெல்லாம் செய்திடல் எம் தேசக்கடமையாக உள்ளது. இதனையே பிரித்தானிய மக்கள் பயபக்தியுடன் அணிந்து நிற்கும் சிவத்த பொபி மலர் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் — உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு, வள்ளுவர் கூறிய வாக்கினைப் பலமுறை படித்திருக்கின்றோம். அதனை [illegible]

# பிரான்சில் 2ம் லெப். மாலதி நினைவாக நடைபெற்ற கண்காட்சியும் ஓவியப் போட்டியும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பெண்புலி 2ம் லெப். மாலதியின் பதினோராவது ஆண்டு நினைவை முன்னிட்டு பிரான்ஸ்—தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால் பிரான்சின் பல பாகங்களிலும் தொடர்ச்சி யான கண்காட்சிகளும் ஓவியப் போட்டிகளும் நடாத்தப்பட்டன.

பெயர்ந்தோர், பாதிக்கப்பட்ட பெண்கள், பெண்களின் போராட்டப் பங்களிப்பு, பொருளாதாரத்தடை, பொருண்மிய மேம்பாடு ஆகியவற்றை சித்தரிக்கின்ற புகைப்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டன. அத்துடன் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிக்கு உதவும் வகையில் மேற்படி தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால்



இறுதியாக 25.10.98 ஞாயிற்றுக் கிழமை பாரிசில் இடம்பெற்ற கண்காட்சியில் தமிழீழ விடுதலைப் போராட்டம், இடப்பெயர்வு, அழிவுகள், இடம் நல்வாய்ப்புச் சீட்டிழுப்பும் நடாத்தப்பட்டது. அதில் சேர்க்கப்பட்ட பணம் உரியவர்களிடம் சேகரிப்பட்டது. ❁

## வீரவணக்கக் கூட்டம்

1996ம் ஆண்டு பாரிசில் படுகொலை செய்யப்பட்ட லெப். கேணல். நாதன், கப்டன் கஜன் ஆகியோரது 2ம் ஆண்டு நினைவு நாளையொட்டி 25.10.98 ஞாயிற்றுக்கிழமை பாரிசில் நினைவுக் கூட்டம் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் அனைத்துலக செயலகப் பிரதிநிதி திரு. வேலும்மயிலும் மனோகரன் அவர்கள் உட்பட பல பேச்சாளர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

திரு. வே. மனோகரன் அவர்கள் உரையாற்றும்போது இம் மாவீரர்களின் விடுதலைப் போராட்ட செயற்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறியதுடன் இன்றைய நிலையில் புலம்பெயர் தமிழ் மக்களுடைய பாரிய கடமைகளையும் எடுத்துரைத்தார். அத்துடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான தற்போதைய நிகழ்வுகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் எடுத்துக் கூறியதோடு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவும் எமது மக்கள் விடுதலை பெறவும் எமது தமிழீழ தேசிய இராணுவம் பலப்படுத்தப்பட வேண்டும் என்வும் அதற்குரிய பொறுப்பு புலம்பெயர் மக்களை சார்ந்தது எனவும் தெரிவித்தார்.

மறுநாள் 26.10.98 அன்று லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரது கல்லறைக்கு மக்கள் மலர் வளையங்களையும் மலர்க் கொத்துக்களையும் வைத்து தமது வீரவணக்கத்தைத் தெரிவித்தனர். மௌனம் பத்திரிகை ஆசிரியர் கி. பி. அரவிந்தன் தனது உரையில் கப்டன் கஜனின் பத்திரிகைத்துறைச் செயற்பாட்டையும் அவரின் நிதானமான அணுகுமுறையையும் நேரிய சிந்தனையையும் எளிமையாக எடுத்து விளக்கினார்.

அத்துடன், பிரஞ்சுப் பணியகப் பிரதிநிதி, ஈழமுரசு அலுவலகம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உரையாற்றினர். ❁

## வரலாற்று நிகழ்வான வலிகாம இடப்பெயர்வு

1995ம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் சிங்களப்படை யாழ்குடாநாட்டை ஆக்கிரமித்தபோது வரலாற்று நிகழ்வான இடப்பெயர்வு ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரியதாக்கத்தை ஏற்படுத்திய, மூன்றாம் ஆண்டைத் தாண்டும் இவ் வரலாற்று இடப்பெயர்வு பற்றி தமிழீழத்தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்... அந்த இடப்பெயர்வு ஒரு வரலாற்று நிகழ்வு இராணுவ முற்றுகை

வசித்த பாரம்பரிய மண்ணைத் துறந்து, வீடு காணி சொத்துக்களைக் கைவிட்டு, ஏதிலிகளாக வெளியேறி, எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பங்கள் எனது நெஞ்சைப் பிளக்கின்றன. இவை யாவும் எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு எனது மக்கள் அளித்த உயர் கட்டப் பங்களிப்பு என்று தான் நான் சொல்லுவேன். ❁

## ஐ.நா.சபைக்கு.....

வாழும் மக்களுக்கு உதவிகள் வழங்குமாறு திரு.வை.கோ அவர்களால் கோரிக்கை விடுக்கப்

www.tamilarangam.net



# அன்று சமாதானத்திற்கான திட்டம் தன்னிடம் உண்டென்றவர்..

# இன்றோ இராணுவத்திட்டத்தை பரிசீலிக்கும் முனைப்பில்!

மனித இதயங்களுக்குள் ஊடுபாவாக உள்ளிருந்து இணைந்து பிணைந்துநிற்கும் அன்புறவும் மனிதநேயமும் எத்துணை பரிசுத்தமானவை. துன்பம் சிங்களவர்களுக்கும் ஒன்று தமிழர்களுக்கும் ஒன்று. இழப்பின் வேதனையை துயரை அணுவணுவாக அனுபவித்தவள், அதனால் தமிழ்மக்களின் துயரைப் போக்குவதே, இந்த யுத்தத்தால் எற்படும் மரணங்களை இழப்பை இல்லாதொழிப்பதே தனது தலையாய கடன் என நான்கு வருடங்களின் முன் புறப்பட்ட அம்மையார் இன்று, கொலைவெறிக் கோரத்தாண்டவம் ஆடுகின்ற மனிதக்கோளாறின் மொத்த உருவமாக மாறியுள்ளார்.

முப்படைகளின் தளபதியாக பேருக்கு

**சமாதானம் அமைதியை வலியுறுத்தி, ஆட்சிக்கு வந்த அம்மையார், இந்த நான்குவருடத்தில், மெல்லமெல்ல உருமாறி, முழுமையாக சிங்கள இனவாதத்திற்கு தலைமை தாங்குகின்ற ஒரு முதிர்ச்சிபெற்ற இனவாதிக்குரிய குணம் குறிகளுடன் தேர்ச்சிபெற்றிருக்கின்றார் என்பதையே தற்போதைய நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன**

இருந்தாலும், தற்போது, மீண்டும் அமைக்கப்பட்டுள்ள கூட்டுப்படைத் தலைமையகத்தின் நேரடிக்கட்டுப் பாட்டை தனது கைகளில் அம்மையார் வைத்துள்ளார். இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதில் இருந்து, பின்னடைவுகள் குறித்த விசாரணைகளிலும் அம்மையார் நேரடியாக சம்பந்தப்பட இதன்மூலம் சாத்தியமிருக்கின்றது.

சமாதானம் அமைதியை வலியுறுத்தி, ஆட்சிக்கு வந்த அம்மையார், இந்த நான்குவருடத்தில், மெல்லமெல்ல உருமாறி, முழுமையாக சிங்கள இனவாதத்திற்கு தலைமைதாங்குகின்ற ஒரு முதிர்ச்சிபெற்ற இனவாதிக்குரிய குணம்குறிகளுடன் தேர்ச்சி பெற்றிருக்கின்றார் என்பதையே தற்போதைய நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

முன்னைய ஆட்சியில், இருந்த பொருளாதாரத்தடையை, மக்களிற்கான பொருட்கள் வேறு, புலிகளின் இராணுவ நடவடிக்கைக்கான பொருட்கள் வேறு என விளக்கமளித்து, கணிசமான பொருட்களுக்கான தடையை பேச்சுவார்த்தை ஆரம்பித்த காலங்களில் நீக்கிய சந்திரிகா, பின்னர் முன்னைய தடைகளை, விளக்கங்கள் வெட்டியுள்ளார்.

சந்திரிகா அரசின் முரட்டுத்தனமான விடாப்பிடியான இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இருப்பிடம் இழந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், இராணுவச் சட்டங்களால் தொழில் செய்யமுடியாதவர்கள் என்று தமிழினம் ஒரு அவலமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கையில் சந்திரிகா அரசோ அவர்களுக்கான நிவாரணத்தை வெட்டியுள்ளது. இந்த நிவாரண வெட்டைக் கண்டித்து வன்னியில், நடைபெற்றுவரும் போராட்டங்கள் தொடர்கின்றபோதும், செவிடன் காதில் ஊதிய சங்காய், சந்திரிகா அம்மையார் மௌனம் சாதித்துவருகின்றார்.

வன்னி நிலவரத்தை வேதனையுடன் பார்ப்பவர்கள் எத்தியோப்பியாவின் நிலையைப்போல வன்னிமண் ஆகிவிடுமோ என்று பயங் கொள்ளுகின்றனர். எலும்பும் தோலுமான நிலையில் தமிழீழச் செல்வம் ஒன்றின் புகைப்படத்தை,



அண்மையில் கொழும்புப் பத்திரிகையொன்று பிரசுரித்துள்ளது. பட்டினி வாழ்வு, இயற்கையின் சீற்றத்திற்கு ஒதுங்கிப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளமுடியாத இருப்பிடம் இல்லாத துன்பநிலை. நோய்க்கு மருந்தில்லை. துயர்கௌவ வாழ்கையின் ஒளிதேடிப் போராடும் வன்னிமக்களின் நிலையை வெளிக்கொணர்வதே செய்தியாளர்களுக்கு பெரும்பாடாய் அமைந்திருக்கின்ற சூழ்நிலை.

இதற்கெல்லாம் ஒருவகை கண்டாக வேண்டிய கட்டாயம் உலகம்வாழ் தமிழ்மக்களின் முன்னால் இருக்கின்ற தலையாய பிரச்சினையாகும்.

- அப்பு -

வன்னிநிலைமை இவ்விதம் இருக்க...

கொழும்புப் பத்திரிகையொன்றில், ஆபிரிக்காவில் பட்டினியால் பாதிக்கப்பட்ட நாட்டுக்குழந்தைகள் போல, தமிழீழக்குழந்தையின் அந்தப் பரிதாபக்கோலம் வன்னிமண்ணின் துன்பத்தின் சாட்சியாக, இளைய சந்ததியின் இன்றைய நிலையின் சாட்சியாக பகைப்படமாக பிரசுரிக்கப்பட்ட அன்றைய நாளில், சிறீலங்காவின் வெளி விவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரோ யுனிசெப் மீது கோவமாகச் சாடியுள்ளார்.

புலிகள் சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துகின்றனர். சிறுவர் நலன்காக்கும் அமைப்பான யுனிசெப் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றது என்பது கணக்காய் அவரது கோபம் இருந்தது.

உண்மையில், யுனிசெப் அமைப்பு, சிறீலங்கா அரசுமீதுதான் கடும்கோபம் கொள்ளவேண்டும். தமிழச் சிறுவர்கள்மீது கரிசனை கொண்டுள்ளவர்கள் போல பிரச்சாரம் செய்துவரும் கதிர்காமர் போன்றவர்கள்மிது காறியே துப்பவேண்டும்.

அவற்றையெல்லாம் யுனிசெப் போன்ற அமைப்புக்கள் செய்யவில்லை அல்லது செய்யத் தயங்குகின்றன என்பதுதான் தமிழர்களின் கவலை.

தமிழீழச் சிறுவர்களின் நிலையைப் பற்றிக் கவலைப்படுபவர், அல்லது கவலைப்படுகின்ற அமைப்புக்கள், முதலில் அவர்களின் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகளில் இறங்குவதே ஆரோக்கியமானது. இச்சிறுவர்களின் உணவில் இருந்து அவர்களின் உடையில் இருந்து அவர்களின் உறைவிடம், கல்வி, அவர்களின் பாதுகாப்பு, பீதியற்ற சககமான வாழ்க்கையில் இருந்துதான் அவர்களின் நலன்கள்...

கற்கவேண்டிய பீதிகொண்டு மிரட்டும் போர்ச் சூழ்நிலையைப் போக்க வேண்டும்.

இதனை உலகநாடுகள், உலக அமைப்புக்கள் செய்யமுன்வரவில்லை என்பது தமிழர்களிடத்தே நிரம்பவும் வேதனையைத் தோற்றுவித்துள்ளன.

பள்ளிக்கூடங்களில் குண்டு களைப்போட்டு, வெள்ளைச் சீருடையில் முல்லைச்சிரிப்புதிர்க்கும் குழந்தை களைக் கொன்று, புலிகளின் முகாம் எனக் கூறிக்கொள்ளும் சந்திரிகா அரசு, தமிழ்ச்சிறுவர்கள் புலிகளில் சேர்கின்றார்கள் என்றோ அல்லது புலிகள் அவர்களைச் சேர்க்கின்றா ர்களோ என்ற கூற எள்ளளவும் யோக்கியதையற்றது என்று யாராவது சிங்கள அரசிற்கு கூறிக்கொள்வாரா என, தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பள்ளிக்கூடங்களில் முகாம் அமைத்து மாணவர்களைக் கைதுசெய்து அடைத்துச் சித்திரவதை செய்து அவர்களை இருப்பிடம் இருந்து விரட்டி, பட்டினிபோட்டு மரணபயத்துடன் வாழும் சூழ் நிலையை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் உங்களுக்கு சுகமாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது அவர்கள் புலியாகவே பயமுறுத்துவர் என்ற யதார்த்தத்தை காவடிஎடுத்துவரும் லக்ஸ்மன் கதிர்காமருக்கும், சமாதானத் திற்கான...

**தமிழீழச் சிறுவர்களின் நிலையைப் பற்றிக் கவலைப்படுபவர், அல்லது கவலைப்படுகின்ற அமைப்புக்கள், முதலில் அவர்களின் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகளில் இறங்குவதே ஆரோக்கியமானது. இச்சிறுவர்களின் உணவில் இருந்து அவர்களின் உடையில் இருந்து அவர்களின் உறைவிடம், கல்வி, அவர்களின் பாதுகாப்பு, பீதியற்ற சகசமான வாழ்க்கையில் இருந்துதான் அவர்களின் நலன்கள் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்